1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

76-ம் புத்தகம் 6-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம் ஆண்டு மாசி மாதம் 8-ந் திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## வாடாத ரோசாமலர் முடிகள்

இங்கிலாந்திலே ஸ்ரொக்போட்நகரைச்சேர்ந்த ஹீற்றன்நொறிஸ் எனுமிடத்திலுள்ள அர்ச். தேவமாதாவின்கோவில் விசாரணைப்பங்குக் கிறீஸ்தவர்கள்ரோசாப்புஷ்பங்கள்கொண்டு முடி ஒன்று செய்து தங்கள் கோவிலிலுள்ள மாதாசுரூபத்தின்சிரசில் சென்ற 1947-ம் ஆண்டு வைகாசிமாதம் புனைந்தார்கள். ஆனால், அந்த முடியில் அற்புதமும், விளக்க இயலாததுமான ஓர் அபூர்வம் இருக்கிறதென்பது அவர்களுக்குத் தெரியாது. வைகாசி மாசம் கழிந்தது. அதனைத்தொடர்ந்து ஏனையமாதங்களும்கழிந்துசென்றன. கடைசியாக ஓர் ஆண்டின்முடிவிலே அவர்கள்பெரிதும் ஆச்சரியமும் ஆனந்தமுங் கொள்ளும்படியாக அந்தரோசாமலர் முடியானது மாதாசுரூபத்தில்சூட்டிய அந்தநாளில் இருந்ததுபோல வாடாமலும் வதங்காமலும் இன்னுமே புத்தப்புதியதாய் இன்பவாசனை பரிமளித்துக்கொண்டிருந்தது. 1948-ம் ஆண்டு வைகாசிமாதம் இரண்டாவது ரோசாமலர்முடி முதலாவதுமுடிக்குமேலாகச் சூட்டப்பட்டது. மேலும் ஓர் வருடம் கடந்துசென்றது. 1949-ம் ஆண்டின் வைகாசியில் இரட்டைமுடிகளுமே ஆச்சரியத்துக்குரியவிதமாய் யாதாமோர் பழுதுமின்றியே புத்தப்புதியனபோல் அற்புதமாய்க் காப்பாற்றப்பட்டிருக்கக் காணப்பட்டன. இருநீண்ட வருடங்கள்சென்றும் அம்முடிகளிலுள்ள ரோசாப்புஷ்பங்களில்இருந்து காந்தியும் இளமையும் பெயரவேயில்லை. 1949-ம் ஆண்டு வைகாசிமாதம் மூன்றாவதுரோசாமலர்முடி புனையப்பட்டது. இப்போது மூன்றுமே இன்னும் வாடாது புதுமலர்களைப்போல் — இறவாதநித்திய இளமலர்களைப்போல் இருந்துவருகின்றன. இதிலிருந்து இங்கிலாந்திலுள்ள கத்தோலிக்க மக்கள் "ரோசாமலர்களின் அருமையான இராக்கினியே" என்று அன்போடுமாதாவை அழைக்கின்றார்கள். 1947-ம் 48,ம் 49-ம் ஆண்டுகளில் புனையப்பெற்ற மூன்று ரோசாமுடிகளுடனும் அந்தமாதாசுரூபத்தின்படம் இம்மாசம் 3-ந்திகதி வெளிவந்த இலங்கைக் 'கதலிக்மெசெஞ்சர்' பத்திரிகையில் காணப்படுகிறது.

### குழந்தைகளின் சுவர்க்கம்

ஆஸ்திரியாவிலும், பவேரியாவிலுமிருந்து கொண்டுபோகப்பட்ட அனாதகுழந்தைகளைவைத்துப்பராமரிப்பதற்காகத் தென் அமெரிக்காவைச்சேர்ந்த வெனெஸியூலா நாட்டிலே டக்றர் ஹெறேரா எனும் கத்தோலிக்கலட்சாதிபர் சமீபத்தில்அமைத்திருக்கும் தருமசாலைக்குக் "குழந்தைகளின் சுவர்க்கம்" எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. கடல்மட்டத்துக்கு மேல் 3,900 அடி உயரத்தில் அமைந்துள்ள இந்தத்தர்மசாலை முன்சொன்ன அனாதகுழந்தைகள் அங்குபோய்ச் சேர்ந்ததும் அவர்களுக்கு ஓர் இளைப்பாறும் தலமாக இருந்துவரும். பின்னர்அவர்களைத் தங்கள்பிள்ளைகளாக எவரும் சுவீகரித்துக் கொள்ளுகிறவரையில்அங்கேயே அவர்கள் இருந்துவருவார்கள். பவேரிய செஞ்சிலுவைச்சங்கத்தின் கண்காணிப்பிலே ஆகாயமார்க்கமாக முதல்ஐம்பதுகுழந்தைகள் எலவே அங்குபோய்ச் சேர்ந்திருக்கிறார்கள். இவர்களில் மூத்ததுக்கு இன்னும் ஏழுவயசு தானுமில்லை. ஆதிகம் இளைய தின்வயசு மாதம் எட்டுமாத்திரமே. டக்றர் ஹெறேராஅவர்கள் சென்றகோடைகாலத்திலே சிலாஸ்பேக்நகரைத் தரிசித்தபோது இந்த ஏற்பாட்டைச் செய்யலாயினர். ஆயிரத்துக்கு மேற்பட்ட அனாதகுழந்தைகளுக்கு இல்லிடம் உதவ அவர்எண்ணுகின்றார்.

### 1950-ம் ஆண்டின் மகாசம்பவம்

றேடியோடக்றரும், பிரித்தானியபாராளுமன்ற அங்கத்தவர்களில் ஒருவருமான டக்றர் சாள்ஸ் ஹில்எனும் புரொட்டஸ்தாந்த பிரமுகர்சமீபத்திலே லூட்ரன்நகர றேட்டறிக்கிளப்பிலே சென்றஆண்டுநிகழ்ந்த முக்கியசம்பவங்களை ஆராய்ந்து அபிப்பிராயங் கூறுகையில் "1950-ம்ஆண்டின் மகாசரித்திரபூர்வமான சம்பவம், தேவமாதாவின் மோட்சாரோபண புதியவிசுவாசசத்தியத்தைப் பரிசுத்தபாப்பரசர் பிரகடனஞ் செய்தமையே" எனத் தெரிவித்திருக்கின்றார். "1950-ம்ஆண்டு கவலைக்குரியஓர்வருடமாய் இருந்துவந்தது. வருகாலத்தில் செய்யப்படவேண்டிய மகாமுக்கியமானவேலை சமாதானத்தை மாத்திரமல்ல ஆனால், உலகில் சுதந்திரத்தையும பாதுகாப்பதாகும்" என்றும் அவர்கூறினர்.

## குயில்காள் கூவுங்கள்!

சமயப் பண்பும், தமிழ்ப் பண்பும் ஒருங்கே இணைந்து தமிழகக் கத்தோலிக்கம் உருவாகும் துறையில் நமக்கு வழிவகுத்த பெரியார்களுள் முதல்வராக நல்லூர், ஞானப்பிரகாச அடிகளைக் குறித்து இக்கட்டுரையின் ஆசிரியர் எழுதியிருப்பது வாசகர்களால் படித்து ரசிக்கத்தக்கது.

"தென்றலகாற்றே! இனிதாய் இங்கேவீசு. தேனைத்தரும் மலரினங்களே! மலர்ந்து மணம் வீசுங்கள். கூவும் இளமாங்குயில்களே! தேன் அனைய இன்னிசை எழுப்புங்கள். ஏன்தெரியுமா? அன்புதூங்காது தூங்குகின்றான் நம்இறைவன்" — இறைவனது மனிதப்பிறப்புக்காட்சியிலே உள்ளத்தைப்பறிகொடுத்த தேம்பாவணிக்கவிஞனது செந்நாவில் ஊற்றெடுத்த செஞ்சொற் கருத்துக்கள் அவை. கண்வளரும் இறைவனை வாழ்த்துமாறு, இயற்கைப் பொருள்களைக் கூவியழைக்கும் மூகமாக, கவிஞன் அமைக்கும் தீஞ்சுவைச் சொல்லோவியத்தைப் பாருங்கள் :—

களித்த நாளில் அரும்பும் தென்காலே,
இனிது ஈங்கு அரும்புதியே!
தளித்த நானத்தேன் அரும்பத்துணர்
நாண் மலர்காள் அரும்புதியே!
விளித்த நாகு மாங்குயில்காள், விளை
தேன் பாவை, அரும்புதிரே!
அளித்த நாதன் நான்கனிய அன்பு
துயிலாத் துயில்கின்றான்.
(தேம்பாவணி—மகவருள் படலம்)

தென்றற்காற்று, நாண் மலர்கள்முதலிய படைப்புப்பொருள்கள் தம்படைப்புத் தலைவனைச் சூழ்ந்து, தலைவணங்கி நிற்கும் பேரின்பப் பேற்றினைப் பெறுகின்றன, கவிஞனது கனவுலகிலே. ஆங்குதோன்றும் இளங்குயில்களும் இறைவனைக் கூவியழைக்கும் தனிப்பேறு பெறுகின்றன. இறைவனது படைப்புத் தொழிலின் உட்பொருளை எவ்விதமாகவோ தெளியவைக்கும் கவிஞனின் கவிமாண்பினை இங்குவியந்து சுவைக்கின்றோம்.

"குயில்காள், கூவுங்கள்" என்ற கவிஞனது செஞ்சொற்கள் இன்றைய தமிழர் உள்ளத்திலே — இளந்தமிழர் உள்ளத்திலே பெரும் புரட்சியைத்தூண்டுவன. செந்தமிழ்நாட்டுக் கத்தோலிக்க பிஞ்சிளம் உள்ளங்களை விளித்துத்தான் "குயில்காள் கூவுங்கள்" என்று அறைகூவிச்சென்றானே கவிஞன்?

குயிலின் இசையில் நாம் மெய்மறந்து நிற்பதின் காரணம், அதில் தோன்றும் தெளிவும் இனிமையும்தான். தெளிவும் இனிமையும் இன்றேல் குயிலிசை நமதுள்ளங்களைக் கவருமா?

கடலூர், அ. நற்குணம்

கத்தோலிக்க பைந்தமிழ்ச் சோலையில் வாழும் இளங்குயில்கள்— இளைஞர்கள் — தெளிவும் இனிமையும் பொருந்தக்கூவுதல் வேண்டும். தமிழ்க் கத்தோலிக்க இளைஞர்களது கருத்திலும், சொல்லிலும், எழுத்திலும் தெளிவு தவழச் செய்வதுஎது? ஆழ்ந்த சமய உணர்வு. இனிமை தவழச் செய்வது எது? ஆழ்ந்த செந்தமிழ்உணர்வு. சமயஉணர்வும், செந்தமிழ் உணர்வும் இணைவதனாலேயே குயிலிசை பிறக்கும் என்ற பேருண்மையைக் கத்தோலிக்க இளங்குயில்கள் நன்கு உணரவேண்டும்.

நமது சமய உண்மைகள் உலகில் எவராலும் மறுக்கவியலாத தனிப்பெருமை வாய்ந்தவை. நமது ஐயன் அருளிய அருண்மொழிகள் உலகம் அழியினும் நிலைபெற்றுநிற்கும் இறைமைபெற்றவை. பாப்பரசர் உலகிற்குநல்கும் சமயவிளக்க உரைகள் வழுவாவரம் பெற்றவை. எனவே, "கத்தோலிக்கன்" என்பதில் நமக்கோர் தனிப்பெருமைஉண்டு. அறிவுஉலகமேதைகள் பலர்தோன்றினர் நம்சமயத்தில். கலைஞரில் கலைஞனா மைக்கல் ஆஞ்சலோவையும், அறிஞரில் அறிஞன் தோமஸ் அக்குயினாஸையும், கவிஞருள்கவிஞன் தாந்தேயையும் ஈன்றளித்தது நமதுசமயம். கருதினல் நியூமன், செஸ்ரேட்டன், ஹிலேர் பெல்லக்போன்ற உலகம்புகழ்பேரறிஞர்கள் தெளிந்த அறிவுச்சுடர் பெறுதற்குக் காரணமாயிருந்தது நமது சமயம். ஆழ்ந்தசமய ஆராய்ச்சியினால் விளையும் சமயப்பற்றும், சமய உணர்வும் நன்குகைவரப்பெற்றுக் கத்தோலிக்க இளைஞர்கள்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கத்தோலிக்க சமாச்சாரம்

### ஆபிரிக்காவின் வேதவிருத்தி

இருண்டகண்டமென அறியப்படுகின்ற ஆபிரிக்காவிலே கடந்த அரைநூற்ருண்டிலும் கத்தோலிக்கர்தொகை பத்து லட்சத்திலிருந்து 1 கோடியே நாற்பதுலட்சமாக அதிகரித்திருப்பதாக இத்தாலியகத்தோலிக்கசேவை வெளியீடான "குவொட்ரிடியானே" எனும் பத்திரிகையில் அறிக்கையிடப்பட்டிருக்கிறது. இன்று ஆபிரிக்காவின் கரைகளைச் சூழவர மாத்திரமல்ல, அதன்சரிமத்தியில்தானும் கத்தோலிக்கர் இருக்கக் காணப்படுகின்றனர். 1900-ம்ஆண்டு அங்கிருந்தகுருமார்தொகை 1,735. இன்ருே 9,402. அதாவது ஒவ்வொரு 1,750 கத்தோலிக்கருக்கும் ஒரு குருவானவர்வீதம் இருக்கின்றனர். தற்போது வேதப்பரப்புதல்விஷயமாய் ஆபிரிக்காவின் மிகப்பெரிய பிரச்சினை போதிய குருமார்இல்லாக் குறைவேயாகும்.

### 1901-ம்ஆண்டின் தீர்க்கதரிசனம்

புதியதோர் உலகயுத்தஅபாயம் நிச்சயமாக வந்தேதீரப் போகிறதென்றுகலங்கிக்கொண்டிருக்கும் உலகமானது, பெல்ஜியகுருமாருக்கெனப் பிரசுரமாகிவரும் "இன்ரர் நொஸ்" எனும் சிறியசஞ்சிகையிலே வெளிவந்துள்ள தீர்க்கதரிசனத்தால் மனச்சாந்தி யடையலாம். அதன்மார்கழிமாத வெளியீடானது யுத்தமேகங்கள் இருள் அடர்ந்துகொண்டுவருவதைக் குறிப்பிட்டு, "ஓர் அர்ச்சியசிஷ்டரைப்போல் பரமபதம்அடைந்தவரான ஓர்இத்தாலிய அப்போஸ்தல"ரென்று அதுசிறப்பித்துக்கூறுகின்ற பார்த்தொலோ லொங்கோ அவர்களால் 1901-ம்ஆண்டு சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களை ஞாபகத்துக்குக் கொணர்ந்திருக்கிறது. "நிகழும்நூற்ருண்டின் சம்பவங்களை முன்னதாகக் கண்டறிந்து இரு உலகயுத்தங்களையும், அதனைத்தொடர்ந்து வரவிருக்கின்ற மற்றோர் பெருஞ்சம்பவமாகிய உலகசமாதானத்தையும் அவர் முன்னதாகஅறிவித்திருந்தார்" என்று அச்சஞ்சிகை தெரிவிக்கின்றது. பிந்திய சம்பவமாகிய உலகசமாதானம்வருவது, இரத்தப்பிரவாகமான புதியதோர் யுத்தத்தின்விளைவாய் அல்ல, ஆனல், தமது திருத்தாயாரது மோட்சாரோபண விசுவாசசத்தியத்தைப் பிரகடனஞ்செய்தமையாலே அவருக்குஅருளப்பட்டமகிமையின்பேரில்கிறீஸ்துநாதருக்குண்டான மகிழ்வின் அறிகுறியாலேயாகும்"

### ஆண்டவரின் திருஅங்கிகள்

ஜேர்மனியிலே ஆச்சென் நகர் ஆசனக்கோவிலில் அதிகம்பூச்சியமாகவைத்துக் காப்பாற்றப்பட்டுவரும் நான்குபெரிய திருப்பண்டங்கள் வருகிறஆடிமாதம் 8-ந்திகதிமுதல் 22-ந்திகதிவரையில் விசுவாசிகளின் வணக்கத்துக்கென்று பிரசித்தமாகக் காட்சிக்குவைக்கப்படவிருக்கின்றன. நமதுதிவ்விய கர்த்தரின் இடையைச்சுற்றி அணிந்ததிருவஸ்திரமும், அவரது பிள்ளைத்துணிகளும், தேவதாயாரின் மேலங்கியும், அர்ச். ஸ்நாபக யுவானியாரின் வெட்டுண்டசிரசு வைக்கப்பட்ட வஸ்திரமுமேஅந்நான்குமாகும். இவைகள்1936-ம் ஆண்டுமுதல் காட்சிக்கு வைக்கப்படவில்லை. அவ்வருடம் இவைகளைக் காட்சிக்கு வைத்தபோது 20 லட்சம் யாத்திரிகர்கள் ஆச்சென்நகர் சென்றிருந்தார்கள். இவைகள்நான்கும் சாளிமேன் சக்கிரவர்த்திக்குப் பரிசுத்தநாட்டிலிருந்து உபகரிக்கப்பட்ட வெகுமானங்களாகும். இவைகள் வைக்கப்பட்டிருக்கும் சேத்திரத்தையும் அவரேகட்டினர். ஒவ்வோர் ஏழுவருடங்களுக்கும் ஒருமுறை இத்திருப்பண்டங்கள் வழமையிலே காட்சிக்குவைக்கப்பட்டுவந்தன. ஆனல், 1943-ம்ஆண்டு யுத்தங்காரணமாக அவ்வாறுசெய்யப்படவில்லை.

### தேவதாயாரும் பாதிரியாரும்

கீர்த்திவாய்ந்த லுத்தேர் சபைப் பாதிரியாரான கனம். ஹான்ஸ் அஸ்முசென் அவர்கள் "தேவனின்தாயாரான மரியம்மாள்" எனும் மகுடநாமத்துடன் ஸ்ரட்காட்நகரிலே வெளியிட்டிருக்கும் புத்தகம்ஒன்றில், மரியம்மாள்இன்றி வேதபுத்தகமே இல்லையெனக் கூறியிருக்கின்ருர். இந்தப்புத்தகமானது சமீபத்திலே தேவதாயாரின் மோட்சாரோபணம் விசுவாசசத்தியமாகப் பிரகடனஞ்செய்யப்பட்டதைமுன்னிட்டுவிசேடித்தவிதமாகச் சமயோசிதமானதென்று கருதப்பட்டுத் திருக்கன்னிமரியாயின் பத்தியைப் பிரசித்தப்படுத்துவதாகும். மரியம்மாள் இல்லாது இரட்சணியபோதனை இருக்கமாட்டாதெனக் கனம். அஸ்முசென் அவர்கள் கூறுகின்ருர். ஏனெனில், இந்தத்தெய்வீககருமங்களின் திட்டத்திலே தேவமாதாவுக்குள்ளபங்கு அவமதிக்கப்படுமானல் சென்மபாவமும், கிறீஸ்துநாதர்மூலமாக மானிடஇரட்சிப்பும் கிரகித்துக்கொள்ள முடியாதனவாகுமென்றும் அவர் எழுதியிருக்கின்ருர்.

## துன்பத்தில் இன்பம்

இரண்டாம் பாகம்

### துன்பத்தைச் சகிப்பது எப்படி?

முதலாம் அதிகாரம்

தேவஇஷ்டப்பிரசாதமுள்ள ஆத்துமத்தோடும் சுத்தகருத்தோடும் துன்பத்தைச் சகிக்கவேண்டும்

(முன்தொடர்ச்சி)

ஓர்சந்நியாசியார் அர்ச்சியசிஷ்டதனத்துக்குரிய வெளியடையாளங்கள் கொண்டிராமலிருந்தும் அற்புதவரத்தராக விளங்கியிருந்தார். வியாதிஸ்தர்மேல் அவருடையஅங்கி படுவதொன்றே அவர்களைக் குணமாக்கப் போதியதாய்இருந்தது. ஓர்நாள் அவருடைய மடாதிபதி அவரைநோக்கி, "நீர்மற்றவர்களிலும் அதிக நன்முன்மாதிரிகையான சீவியம்நடத்துவதாய் நமக்குத் தோன்றவில்லையே. அப்படியிருக்க நீர் இப்படி அற்புதஆரோக்கியங்களைக் கொடுப்பதெப்படி?" என்று கேட்டார். சந்நியாசியார் தமக்கு அதுஆச்சரியத்துக்கிடமாய் இருக்கிறதென்றும், காரணம் தெரியவில்லையென்றும் சொன்னர். அப்போது மடாதிபதி நீர்கைக்கொண்டுவரும் பத்தியனுசாரங்கள் எவையென்றுவினவினர். தேவனுடைய சித்தத்துக்குத் தமது சித்தத்தை முற்றும் ஒப்புக்கொடுத்துவிட அவர் தமக்குவரம் அருளியிருக்கிருரென்றும், அவருக்குச் சித்தமானதே தமக்கும் மனசாயிருக்கும்படி தாம் மிகவும கவனித்துவருகிறதாகவும், இதுவன்றி வேருெருவிசேஷ பத்தியனுசாரமும் தம்மிடம்இல்லையென்றும் மாறுத்தரஞ்சொன்னர்.

மேலும் அந்தத்துறவிசொல்லியதாவது: அனுகூலத்தினல் நான் மனக்கர்வங் கொள்வதுமில்லை, பிரதிகூலத்தினல் மனங்குன்றிப் போவதுமில்லை. சகலமுந் தேவகரங்களில்நின்று வருவதாக ஏற்றுக்கொள்ளுகிறேன். அவருடையதிருவுளம் என்னிடம் பூரணமாய் நிறைவேறும்நோக்கமாகவே என் செபமெல்லாம் ஒப்புக்கொடுத்துவருகிறேன் என்ருர்.

மடாதிபதிமீண்டும் அவரைநோக்கி: எங்கள்சத்துரு எங்கள்மந்தையையும் தானியக்களஞ்சியத்தையும் நேற்று அக்கினிக்கிரையாக்கி விட்டதையிட்டு நீர் மனச்கோபங்கொள்ளவில்லையா? என்ருர். அவர், நான்கோபங்கொண்டதில்லை; அதற்குப்பதிலாய் நான் இவ்விதவிபத்துக்கள் நேரிடும்சமயங்களில் செய்யவழக்கப்பட்டபிரகாரம் சருவேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்தினேன்; நான் அறிந்திருக்கிறபடி அவர் தமதுமகிமைக்காகவே எல்லாவற்றையும் செய்தருளினர். இக்காரணமாக நான் என்னென்ன சம்பவித்தாலும் எப்போதும் மனரம்மியமாய் இருக்கிறேன்என்ருர். இதனைக் கேட்கவே சருவேசுரனுடைய சித்தத்துடன் அந்தச்சந்நியாசியாருடைய சித்தம் ஏகோபித்திருப்பதே அவரது புதுமைவரத்துக்குக் காரணமென்று மடாதிபதி விளங்கிக்கொண்டார்.

ஊஸ்என்னும்நாட்டிலே யோபுஎன்னும்பெயருடைய ஓர்மகாத்துமா இருந்தார். புண்ணியபாக்கியத்திற்சிறந்தவராயிருந்த அப்பரிசுத்தவான் பிள்ளைப்பாக்கியமும், செல்வப்பாக்கியமும் நிறைந்தவராயும் விளங்கியிருந்தார். மனுஷசத்துருவான பிசாசு தேவனிடம் விடைபெற்றுக்கொண்டு அவருக்குப் பயங்கரமான நஷ்டம் விளைத்து அவரைச்சோதிக்கலாயிற்று.

ஒருநாள் சபியானர் திரண்டுவந்து அவருடைய ஐஞ்ஞூறுஇணைஎருதுகளையும், ஐஞ்ஞூறு கழுதைகளையும் ஓட்டிக்கொண்டு தப்பிவிட்டார்கள். இச்செய்தியை யோபுவுக்கு ஓர்ஊழியன்வந்து சொன்னன்சொல்லவில்லை, வேருெருஊழியன்வந்து வானத்தில்நின்று அக்கினிபொழிந்து அவருடைய ஏழாயிரம்ஆடுகளையும், இடையரையும் சுட்டெரித்துப்போட்டதாக அறிவித்தான். அவன்வாய்மூடுமுன் மற்ருேர்ஊழியன்வந்து, அவருடைய மூவாயிரம்ஒட்டைகளையும் கல்தேயர் பலவந்தமாய் ஓட்டிக்கொண்டு போய்விட்டார்கள் என்றுதெரிவித்தான். அவர்இச்செய்தி கேட்டுமுடியுமுன் இன்னெருஊழியன் வந்து, அவரது ஏழுபுத்திரரும் மூன்றுபுத்திரிகளுமாய் விருந்தாடிக்கொண்டிருக்கும்வேளை சண்டமாருதம்ஒன்று வீசி வீடுஇடிந்துவிழுந்து பிள்ளைகள் எல்லாரும் சீவமோசமானர்களென்று தெரிவித்தான். இப்பாரப்பெரும் சேதபாதங்கள் இடிமேல்இடி இடித்தவாறு நேரிட்டு ஒன்றின்பின் ஒன்ருய் யோபுமகாத்துமாவின் செவிக்கெட்டினலும், அவர் ஈதெல்லாம் பிசாசுமூலமாய் நேரிட்டதென்று அறிந்திருந்தாலும் அவர் "கர்த்தர்தந்தார், பிசாசு எடுத்துக்கொண்டது" என்று சொல்லாமல் "ஆண்டவர் தந்தார், ஆண்டவர் எடுத்துக்கொண்டார்" என்றும், "பிசாசுக்கு எப்படிச்சித்தமாயிற்ருே அப்படியே நடக்கலாயிற்று" என்று சொல்லாமல் "ஆண்டவருக்கு எப்படிச்சித்தமோ அப்படியே நடக்கலாயிற்று" என்று சொல்லித் தமக்குத் திருடராலும், அக்கினியாலும், பிசாசினலுமல்ல, தேவனலே, அவர்திருச்சித்தத்தினலே

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## பாடுபாப்பா!

"ஜெயம்"

**பல்லவி**

பாடுபாப்பா பாடுபாப்பா—யேசு
பாதம் பணிந்துநிதம் பாடுபாப்பா

**சரணங்கள்**

1. கன்னித் தமிழ்முழங்கப் பாடுபாப்பா—'பாது
காவலன்' புகழ்விளங்கப் பாடுபாப்பா
அன்னைபிதா தெய்வமென்று பாடுபாப்பா—என்றும்
ஆலயந் தொழுவோமென்று பாடுபாப்பா.
2. சத்தியவே தந்தழைக்கப் பாடுபாப்பா—எங்கள்
சற்குருக்க ளைப்பணிந்து பாடுபாப்பா
முத்திபெற வேணுமென்று பாடுபாப்பா—வேத
மொழியே கடவோமென்று பாடுபாப்பா
3. எண்ணெழுத் தறிவோமென்று பாடுபாப்பா—நாளும்
ஈகையே தவருேமென்று பாடுபாப்பா
மண்ணுலகு மாயமென்று பாடுபாப்பா—தஞ்சம்
மாமரியாள் பாதமென்று பாடுபாப்பா [வில்
4. உண்மைசொல வேண்டுமென்று பாடுபாப்பா—வாழ்
ஒழுக்கந் தவருேமென்று பாடுபாப்பா
புண்ணியம் புரிவோமென்று பாடுபாப்பா—உள்ளப்
புனித மடைவோமென்று பாடுபாப்பா
5. அன்பை வளர்ப்போமென்று பாடுபாப்பா—பாழும்
அச்சந் தவிர்ப்போமென்று பாடுபாப்பா
துன்பந் துடைப்போமென்று பாடுபாப்பா—பாரிற்
துணிவு படைப்போமென்று பாடுபாப்பா
6. கோபந் தணிவோமென்று பாடுபாப்பா—பொல்லாக்
கொடுமை யொழிப்போமென்று பாடுபாப்பா
பாபம் வெறுப்போமென்று பாடுபாப்பா—கூடும்
பகைமை மறப்போமென்று பாடுபாப்பா
7. சோம்பித் திரியோமென்று பாடுபாப்பா—தேக
சுகத்தைப் பெறுவோமென்று பாடுபாப்பா
வீம்பை விரும்போமென்று பாடுபாப்பா—கொண்ட
வினையை முடிப்போமென்று பாடுபாப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபசுகாலத்தின்

## 1-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(மத். 4: 1—11)

அக்காலத்தில் யேசுநாதர் பசாசினுல்சோதிக்கப்படுவதற்கு இஸ்பிரீத்துசாந்துவினுல் வனந்தரத்துக்குக் கூட்டிக்கொண்டு போகப்பட்டார். அவர் அவ்விடத்தில் நாற்பதுஇரவும், நாற்பதுபகலும் உபவாசமாயிருந்த பின்பு பசியுற்ருர். அப்பொழுது சோதனைசெய்வோன் அவரிடம் வந்து: நீர் சர்வேசுரனுடைய சுதனுனல், இந்தக்கல்லுகள் அப்பமாகும்படி சொல்லுமென்ருன். யேசுநாதர் மறுமொழியாக: மனிதன் அப்பத்தினுல் மாத்திரமல்ல, சர்வேசுரனுடைய திருவாயினின்று புறப்படுகிற எந்தவாக்கினுலும் பிழைக்கிருனென்று எழுதப்பட்டிருக்கிறதென்ருர். அப்போது பசாசு அவரைப் பரிசுத்தநகரத்திற்குத் தூக்கிக்கொண்டு போய்த் தேவாலயச் சிகரத்தின் மேல் அவரைநிறுத்தி, அவரை நோக்கி: நீர் சர்வேசுரனுடைய குமாரனுனல், கீழே குதியும்; ஏனெனில், அவர் உம்மைக் குறித்துத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிருரென்றும், உமதுபாதம் ஒரு வேளை கல்லில் மோதாதபடிக்கு அவர்கள்உம்மைக் கரங்களால் ஏந்திக்கொள்வார்களென்றும் எழுதியிருக்கின்றதென்ருன். யேசுநாதர் அவனைப்பார்த்து: உன்தேவனுகிய ஆண்டவரைச் சோதியாதிருப்பாயாகவென்றும் எழுதப்பட்டிருக்கின்றதென்ருர். மறுபடியும்பசாசு அவரை மிகவும்உயர்ந்த ஓர்பருவதத்தின் மேல் எடுத்துக்கொண்டுபோய், உலகஇராச்சியங்கள் எல்லாவற்றையும், அவைகளின் மகிமையையும் அவருக்குக்காண்பித்து: நீர்சாஷ்டாங்கமாக விழுந்து என்னை ஆராதிப்பீராகில் இவை எல்லாவற்றையும் உமக்குத்தருவேனென்று அவருக்குச்சொன்னுன். அப்போது யேசுநாதர் அவனைநோக்கி: சாத்தானே அகன்றுபோ; ஏனெனில் உன் தேவனுகிய ஆண்டவரை ஆராதித்து, அவரொருவரையே சேவிப்பாயாகவென்று எழுதப்பட்டிருக்கிறதென்ருர் அப்பொழுது பசாசு அவரைவிட்டுப்போகவே, இதோ! தேவதூதராணுகி அவருக்குப்பணிவிடை செய்தனர்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

---

—யப்பானின் தலைப்பட்டணமாகிய ரோக்கியோ நகரிலே சென்ற கிறிஸ்மஸ் வாரத்தில் 500 பேர்வரையில் ஞானஸ்நானம்பெற்றுக் கத்தோலிக்க திருமறையில் சேர்ந்திருக்கின்றனர். அங்கு யேசுசபைக்குருமாரால் விசாரணைசெய்யப்படும் அர்ச். இஞ்ஞாசியாரின் விசாரணைப்பங்கில்மாத்திரம் 114 பேர் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர். இவர்களில் அங்கு யேசுசபையாராலும், ஏனையோராலும் நடத்தப்படும் சர்வகலாசாலைகளைச் சேர்ந்த 30 மாணவர்களும் அடங்குவார்கள்.

## நாளு சங்கதிகள்

—:—

—பிரித்தானியஅரசு 470 கோடி பவுண் செலவுமதிப்புள்ள தனதுஆயுத சுவீகாரணதிட்டத்தை நிறைவேற்றி வைக்குமாறு யுத்தகாலத்தில்இருந்த கட்டுப்பாடுகளைத் திரும்பவும் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டியதாய்இருக்குமென்று பிரித்தானிய பாராளுமன்றத்திலே அதன் பிரதமரான திரு. கிளெமென்ற் அட்லிஅவர்கள் தெரிவித்திருக்கின்ருர். அதன்படி பொதுவானவேலைகளிலிருந்து தொழிலாளரை யுத்தகைத்தொழில்களில் பலவந்தமாக ஈடுபடுத்துவதும் ஒன்ருகும்.

—ஐரோப்பாவிலிருந்து சென்ற தைமாதம் 28-ந்திகதி இந்தியாவுக்குத் திரும்பிய சென்னை அதிமேற்றிராணியாரான லூயிஸ் மத்தியாஸ்ஆண்டவர் சென்னையிலே பத்திரிகைநிருபர்களுடன் பேசியபோது, இத்தாலியமக்களிற் பெரும்பான்மையினர் கம்யூனிஸத்தை எதிர்த்துநிற்கின்றனரென்றும், பிரான்சிலே கம்யூனிஸ்தார்களின் பலம் மிகவும் குறைந்துவிட்டதென்றும், பிரான்சியமக்களிடையே வேதவிசுவாசம் மீண்டும் தலையெடுக்கத் தொடங்கியுள்ளதென்றும் தெரிவித்திருக்கின்ருர்.

—சீனத்தேசிய அரசாங்கத்தின்கீழ் 16 வருடகாலம் ஸ்தானிகராகக் கடமைபார்த்துவந்தவரான திரு. பிலிப்டி சியாங் அவர்கள் தற்போது கோலாலம்பூரில் ஓர்ஐஸ்கிறீம்தொழிற்சாலையை அமைக்கத் தீர்மானித்திருக்கின்ருர். கொதிக்கும் இராஜீய விஷயத்தைக்காட்டிலும் குளுமையான ஐஸ்கிறீம்வேலைதான் நல்லதென்று இவர் கூறுகின்ருர். யப்பான் சரணுகதியடைந்தபின் இவர் கோலாலம்பூரிலே தேசீயசீனுவின் ஸ்தானிகராக இருந்துவந்தார்.

—தற்போதைய பாதுகாப்புத்திட்டங்களின்படி பிரான்சியஅரசு 1953-ம் ஆண்டின் இறுதியிலே இருபதுபடைவகுப்புகளைக்கொண்டதாய் இருக்குமென்று பிரான்சியபிரதமரான எம். பிளெவன் அவர்கள் வாஷிங்ரன்நகரிலே தெரிவித்திருக்கின்ருர், அப்போது அந்த இருபது படைவகுப்புகளிலும் இரண்டாவது உலகயுத்தம் ஆரம்பமானபோது இருந்தவர்களிலும் ஒரு லட்சம்போர்வீரர்கள் அதிகமாகஇருப்பார்களாம்.

— லண்டன்நகரிலே பதினுறுவருடகாலமாக ஓர் குருடராயிருந்துவந்த டானியேல் ருன்ஸ் பொட்ரம் என்பவர் சமீபத்திலே முதன்முறையாகத் தனது ஏழுபிள்ளைகளையும் கண்ணுரக்காணும் பாக்கியத்தைஅடையலாயினர். மான்செஸ்றரிலுள்ள றேயல் கண் ஆஸ்பத்திரியிலே நடத்திய சத்திரவைத்தியமானது அவருடையகண்களில் ஒன்றுக்குத் திரும்பவும் பார்வையைக் கொண்டுவரலாயிற்று.

—கோறியாவிலே கம்யூனிஸ்த சீனுவை ஓர்ஆக்கிரமிப்புநாடெனக் கண்டனஞ்செய்து அமெரிக்க ஐக்கியதேசம் கொண்டுவந்தபிரேரணையை ஐ. நா. பொதுமகாசபை சென்ற வெள்ளிக்கிழமை அங்கீகரித்துவிட்டது. அதற்குச்சாதகமாக 44 நாடுகளும், பாதகமாக ஏழுநாடுகளும் சீட்டுப்போட்டன. ஒன்பதுநாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ள மறுத்துவிட்டன.

—நிகழும் 1951-ம் ஆண்டிலே முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டும்முதலாவது திருவைபவம் இந்தமாசிமாதம் 18-ந்திகதியன்று நடந்தேறுமெனத் தெரியவருகிறது. 1900-ம் ஆண்டு பொக்ஸரது கலகத்தின்போது சீனுவிலேவேதசாட்சியான ஆசா. அல்பெறிக்கோ கிறேசிற் றெலி அவர்கள் அன்றுதினம் முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டப்படுவார்.

## பருத்தித்துறை, தும்பளை
## பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள்
### மாசிமாதம் 11-ந்திகதி

இத்திருநாளுக்கு ஆயத்தமாக மாசிமாதம் 1-ந்திகதி சாயந்தரம் 6 மணிக்கு நோவனைகள் தொடங்கும்.

நிகழ்ச்சிகள் :—

I மாசிமாதம் 10-ந்திகதி சனிக்கிழமை பிற்பகல் 6 மணிக்கு மெழுகுவர்த்தித் தீபஅலங்காரச் சுற்றுப்பிரகாரம்.

II பிற்பகல் 7 மணிக்குப் பிரசங்கம்.

III ,, 7-30 மணிக்கு மகாவந். மேற்றிராணியாண்டவர் அவர்களால் வேஸ்பர் ஆராதனை—தேவநற்கருணை ஆசீர்வாதம்.

IV 11-ந்திகதி காலை 7 மணிக்குப் பாடற்பூசை.

☞ திருக்கேபியில் யாத்திரிகட்கேற்ற சகலவசதிகளுமுண்டு.

மகாவந். மேற்றிராணியாண்டவர் சமூகமளிப்பார்.

கட்டளைக்தார.

## தமிழில் ஞானஒடுக்கம்

சென்ற 25-1-51 வியாழன் மாலை தொடக்கம் அடுத்தஞாயிறுகாலைவரை பம்பலப்பிட்டி, பரிசுத்தமரியநாயகியின் கோவிற்பங்கைச்சேர்ந்த தமிழ்பேசும் கத்தோலிக்க மக்களுக்கென ஓர்ஞானஒடுக்கம் நடந்தேறியதற்காகத் தேவனைத்தோத்திரிக்கிறேம். கடந்தபதினைந்து வருடங்களாக இவ்விதமான ஓர் ஞானஒடுக்கம் இங்குநடந்திருக்கவில்லை. ஆனுல், மரியாயின் சேனையாளரின் விடாமுயற்சியாலும் பள்ளிப்பாலரின் பத்தியுள்ளமன்ருட்டாலும் இவ்வருடம் இந்தஅருங்கொடை மரியாயின் திருக்கரத்திலிருந்து புதுமையாகக் கிடைக்கப்பெற்றேம்.

வண. J. இராசகாரியார் சுவாமியவர்கள் இந்தியாவிலுள்ள தமது விசாரணைப்பங்கிலிருந்து இங்குவந்து ஆன்மகாதலோடு பத்தியருட்சிக்குரியவிதமாக அமிர்தபிரசங்கங்கள் செய்துவந்தார். காலை, மதியம், மாலைஆகத் தினமும் மூன்றுபிரசங்கங்களை இலகுவான இனியதமிழில் பொழிந்தருளினுர். அவரது போதனுசக்தியால் கவரப்பட்ட அநேக கத்தோலிக்கர் திரும்பவும் பரமபிதாவின் பாதங்களை வந்துசேர்ந்தனர். மனந்திரும்பினர். நல்லபாவசங்கீர்த்தனம் பண்ணித் திவ்வியநன்மைபெற்றுத் திருப்தியாயினர். மாணவர்களின் பத்திப்பாடல்கள் அவர்களின் உள்ளங்களை அருட்டி, ஒடுக்கத்தையும் சிறப்பித்தன. மாணவர்களைத் தவிர, ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த ஏறக்குறைய முந்நூறுபேர் இந்த ஞானஒடுக்கத்தில் பங்குபற்றியதைக் கண்ட பங்குக்குருவானவர் உட்படப் பலரும் ஆச்சரியமுற்றனர்.

ஞானஒடுக்கப் பூசைமுடிந்தபின் கிறீஸ்தவர்கள் எலலோரும் திரண்டு பாடசாலை மண்டபத்தில் ஞானஒடுக்க போதகரை வரவேற்று, மாலைசூட்டிக் கீதம்பாடி அகம்மகிழ்ந்து நின்றனர். அவ்வேளை பழையமாணவர்சங்க தலைவர் திரு. A. P. தம்பிராசா அவர்கள் சுவாமியவர்களின் சொல்வன்மையையும், ஆத்துமஇரட்சணிய வாஞ்சையையும், தற்பரித்தியாகசிந்தையையும்புகழ்ந்துநன்றிகூறி இனிமேலாவது தமிழில் பாவசங்கீர்த்தனமும், பிரசங்கமும் தொடர்ந்துகிடைக்கத்தக்க வழிசெய்துவைத்துப் போகுமாறு அவரிடம்விண்ணப்பித்துநின்ருர். பழையமாணவர்யாவரையும்தூண்டி ஞானஒடுக்கத்தில் பங்குபற்றச்செய்த பெருமுயர்ச்சியைப் பாராட்டியும், அவர்கள்கம்யூனிஸத்தை தம்முழுச்சக்தியுடனும் எதிர்த்துவருவதைச் சுட்டிக்காட்டியும் அவர்களுக்குப் பங்குக்குருவானவரும், பிறரும் விசேடஉதவிகள் புரியவேண்டுமெனக் கேட்டுநின்ருர்.

பாடசாலையின்சார்பாக ஆசிரியர் திரு. சந்தியாப்பிள்ளையவர்கள் பேசியவிடத்து: போதகசுவாமியவர்களின் குடும்பம் ஓர்பாக்கியமான குடும்பம் என்றும், ஏனெனில், அந்தப்பத்தியுள்ள குடும்பத்திலிருந்து தேவன் தமது திருச்சபை உத்தியானத்துக்குத் தேவஊழியர்களாக இந்தியாவுக்கு ஒருவரும், இலங்கைக்கு ஒருவருமாக இருபுத்திரர்களைத் தெரிந்துகொள்ளச் சித்தமானுராகலின் அவர்நாமம்புகழப்படுவதாக என்றும் கூறிநின்ருர். மேலும் சுவாமியவர்கள் இந்தியாவில் நின்று இங்குவந்தார், தவறிப்போன ஆத்துமாக்களைக்கண்டார், தேவனின் பக்கமாக அவர்களின் உள்ளங்களை வென்ருர், அவர் செய்ததொண்டு பாராட்டத்தக்கது; இன்று நாம் ஓர் ஞானவெற்றிவீரனுகவும், தேவஇராசாவின் காரியஸ்தனுகவும் அவரைவரவேற்கிறேம்என வாழ்த்திநின்ருர். திரு. இஞ்ஞாசிஎன்டவரும் நன்றிகூறினுர். ஈற்றில் சுவாமியவர்கள் எழுந்து தாம் செய்தநன்மை தேவனுல் ஆனதுஎன்றும், இங்கும்பெரும்பாலான இந்தியருக்கே சேவைசெய்யக் கிடைத்தது பெரும்பாக்கியம் என்றும், தமக்குச் செய்த உபசாரத்துக்கு நன்றிகூறுவதாகவும் கூறிநின்ருர். ஞானஒடுக்கத்தை உருவாக்கிய மரியாயின் சேனையாளருக்கும், விமரிசையாக வழிநடத்திய போதகசுவாமியவர்களுக்கும், ஞானஒடுக்கத்தைச் சீராகநடத்திமுடித்த பழையமாணவர்கட்கும் எம்நன்றிஎன்றும் உரியதாகுக. தேவன் அவர்களை ஆசீர்வதிப்பாராக.

— பாடசாலை மாணவி



ஸ்ரீமதி அன்னம்மா ஞானப்பிரகாசம்

மரணத்திரையில் மறைந்த

### ஐந்தாம்வருட ஞாபகம்

பிறப்பு — 25-11-1899

இறப்பு — 13- 2-1946

இதனைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளும், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிமாரும், மற்றும் அன்பர்களும் இவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்ருடிக்கொள்ளுமாறு பரிவாக வேண்டுகின்றேம்.

பாதுகாவலன் பத்திராசிரியரும் பிள்ளைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

மாசிமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 9 | அர்ச். அலெக்சா. சிறிலப்பர் | (வெ) |
| சனி | 10 | அர்ச். ஸ்கொலாஸ்திக்கா | (வெ) |
| ஞா | 11 | தபசுகாலத்தின் முதலாம் ஞாயிறு — லூர்துமாதா திருநாள் | (ஊ) |
| திங் | 12 | அர்ச். எவுலாலியம்மாள் | (வெ) |
| செவ் | 13 | அர்ச். மர்த்தினியார் | (ஊ) |
| புத | 14 | அர்ச். வலென்றினுர் | (ஊ) |
| வியா | 15 | அர்ச். பவுஸ்தீனுர் | (ஊ) |

# சத்தியவேத பாதுகாவலன்

1951-ம் ஆண்டு

மாசி மாதம் 8-ந் திகதி

## சுதந்திர மூவாண்டு

நமதுசெல்வநாடாகிய ஸ்ரீலங்கா சுதந்திரம்அடைந்த மூன்ருவதுஆண்டு நிறைவுவிழா சென்ற 5-ந்திகதி திங்கட்கிழமை சமயவழிபாடுகளோடும், பிறவைபவங்களோடும் இனிதே கொண்டாடப்படலாயிற்று. எமதுநாடு தனதுபண்டைச் சுதந்திரத்தைப்பெற்று அன்ருேடு மூவாண்டுகள் பூர்த்தியாயின. இந்தவேளை பொதுவாகக்கடந்த மூவாண்டுகளிலும், சிறப்பாகச் சென்ற ஓராண்டிலும் சாதிக்கப்பட்டவைகள் என்ன? இனிச்சாதிக்கப்படவேண்டியிருப்பவைகள் எவை? என்பனபற்றிக்கவர்னர்-ஜெனறலும், பிரதமர் சேனநாயக அவர்களும், மற்றும்பெரியார்களும் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்ருர்கள். தேசிய வாழ்க்கையின் சகலஅம்சங்களிலும், அதாவது அரசியல், சமூக, கைத்தொழில், கமத்தொழில்ஆதியாம் பல்வேறு துறைகளிலும் கணிசமான அபிவிர்த்தி ஏற்பட்டிருப்பதாக அன்று கவர்னர்-ஜெனறல் கூறியுள்ளனர். சென்றசுதந்திர மூவாண்டுகளிலும் நாம் சாதித்திருப்பவைகளையிட்டுச் சிறிது திருப்தியடையலாமென அன்று பிரதமர் சேனநாயக அவர்கள் எடுத்துக்கூறியிருக்கின்ருர். ஓர்பெரிய நீர்வீழ்ச்சி மின்சாரத்திட்டத்தின் முதலாவதுபகுதி பூர்த்தியடைந்து நாட்டின்கைத்தொழில்விருத்தியிலே ஓர்புதிய அத்தியாயம் ஆரம்பமாகியிருக்கிறது. ஓர்முக்கியமான கைத்தொழிற்சாலை, அதாவது சீமெந்துத்தொழிற்சாலை வேலைசெய்யத தொடங்கியிருக்கிறது. கல்லோயாத்திட்டமும், மற்றும் அநேக நீர்ப்பாசனதிட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. குடியேற்றதிட்டங்களும், காணிஅபிவிர்த்தித் திட்டங்களும் துரிதமாக முன்னேறிவருகின்றன. சுகாதார சேவைகளும், சமூகசேவைகளும், கல்விச்சேவைகளும், இதரஇயக்கங்களும் பாராட்டத்தக்கவகையிலே விருத்தியடைந்துவருகின்றன. பொதுவிலே நோக்குமிடத்து இலங்கை சுதந்திரம் பெற்ற நாள்முதல் நாட்டின் இயற்கைவளங்களையும், மக்களின் வாழ்க்கைநிலைமைகளையும் அபிவிர்த்தி செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றுவந்திருக்கின்றன. நாடோறும் அதிகரித்துக்கொண்டுவரும் தேசியவருமானம்இவையெல்லாவற்றிற்கும் சந்தர்ப்பம்அளித்துவருகின்றது. ஆசியாவிலுள்ள ஏனையநாடுகளுடன் ஒப்புநோக்குமிடத்து, அந்நாடுகள் அனுபவித்துவரும் எவ்வளவோபெருங் கஷ்டங்களிலிருந்து கடவுளின் திருவருளால் இலங்கை தப்பிக்கொண்டதெனச் சொல்லலாம். ஆனல், சமதர்மவாதிகளும்,மற்றும்அரசியல்விரோதிகளும் இவைகளை அறிந்தும்அறியாதவர்கள்போல் குற்றம்பிடிப்பதும், ஆட்சேபனைசெய்வதும் மதியீனமான செயல்களாகும். ரோமைநகர் ஒருநாளில் கட்டப்படவில்லையென்ற முதுமொழியை இவர்களுக்கு ஞாபகப் படுத்துகின்ருேம். மக்கள்சகலரும் சுதந்திரஉணர்ச்சியோடும், நல்மனத்தோடும் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தும், அது செய்துவரும் திட்டங்களை ஆதரித்தும், ஒவ்வொருவரும் தம்மாலானதைச்செய்தும்வருவார்களாயின் இன்னும் அதிகதீவிரமாக எமதுநாடு முன்னேறும் என்று நம்பியிருக்கலாம்.

## செவாலியர் லீயனல் B. இம்மனுவேல்

யாழ்ப்பாணத் தமிழ்ப்பிரமுகர்களில்ஒருவரும், தற்போது கொழும்பிலே கொட்டாஞ்சேனையில் சஞ்சரித்துவருகிறவருமான ஸ்ரீமான் லீயனல் B. இம்மனுவேல்அவர்கள் இலங்கையிலே கத்தோலிக்க திருச்சபையின் அபிவிர்த்தியிலும், சுபீட்சத்திலும் அதிகமான கரிசனையெடுத்தும், திருச்சபை ஈடுபடும் நன்மையான கருமங்களிலெல்லாம் மனப்பூர்வமாக ஆதரவளித்தும்நெடுங்காலமாகஆற்றிவந்துள்ள அருஞ்சேவைகளைப் பாராட்டிப் பரிசுத்தபாப்பரசர் அவருக்கு அர்ச். பெரியகிறகோரியாரின் நைற்பட்டம் சன்மானித்திருக்கிருரென அறிந்து சந்தோஷமானேம். நம்புதிய நைற்பட்டவர்த்தனரான செவாலியர் இம்மனுவேல் அவர்கள் அரசாங்கத்தின்கீழ் நெடுங்காலம் பிரமாணிக்கமாகவும், பிரஸ்தாபமாகவும் கடமைபார்த்து, பகிரங்கவேலைப்பகுதி உபதலைவராய் விளங்கியிருந்து சிலகாலத்தின்முன் இளைப்பாறினர். அப்போது இவரின் அரசாங்கசேவைகளை அரசபெருமான் பெரிதும் அபிமானித்து இவருக்கு ஐ. எஸ். ஓ. எனும் மகிமைவரிசை வெகுமானித்திருந்தார். செவாலியர் லீயனல் இம்மனுவேல்அவர்கள் கடந்த நாற்பதுவருடங்களாகக்கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் பொதுவாகச் சமூகசேவையிலும் சிறப்பாகக் கத்தோலிக்க சேவையிலும் ஊக்கமாக உழைத்து, கோவில்களுக்கும், குருமடம், கல்லூரிகளுக்கும், மற்றும்கத்தோலிக்க ஸ்தாபனங்களுக்கும் நன்கொடைகளாகவும், வித்தியாவெகுமதிகளாகவும், பிறஉதவிகளாகவும் லட்சக்கணக்கான ரூபாக்கள் வழங்கியிருக்கின்ருர். தாம்கையிடுமாறு அழைக்கப்படுகின்ற கத்தோலிக்க இயக்கங்களிலெல்லாம் முன்னணியில் நின்று பணியாற்றிவந்திருக்கின்ருர். இவரது செல்வாக்காலும், சொல்வாக்குத்தவருமை ஆதியாம் நல்லகுணவிசேஷங்களாலும் இன்று எத்தனையோபேர் நல்லபதவிகள்வகித்து மனுஷராகவ்ளங்குகின்றனர். பெரியோர் சிறியோர்என்றபேதம் பாராட்டாது எவ்வெவரோடும் அன்புததும்ப,புன்னகையரும்ப அனுதாபத்துடன் புழங்கிவரும் சுபாவம்படைத்தவரும், உத்தம கத்தோலிக்கருமான இவருக்குப் பரிசுத்த பாப்பரசர் நைற்பட்டம் வழங்கியதையிட்டு எவருமே மகிழ்ச்சியடைவரென்று சொல்லவேண்டியதில்லை.நாமும் இந்தவேளை செவாலியர் இம்மானுவேல் அவர்களுக்குச் சோபனங்கூறுகின்ருேம். அவர் இன்னும் பலவருடகாலம் சுகசீவியாய்வாழ்ந்து தமதுஅருஞ்சேவைகளை முன்போலத் தொடர்ந்து ஆற்றிவரத் தயைபாலிக்குமாறுதிருவருளை இரந்துகொள்ளுகின்ருேம்.

## சுதேச வர்த்தமானம்

### ஆசனக்கோவில் ஞானஒடுக்கம்

பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் கோவிலையும், சுண்டிக்குளி சஞ்சுவாம் கோவிலையும்சேர்ந்த பெண்பாலாரின் தபசுகால வருடாந்தஞானவொடுக்கம் இம்மாசம் 25-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஆரம்பமாகி அடுத்த பங்குனிமாசம் 4-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை முடிவாகும். இதிலே குறித்த இருகோவில்களையுஞ்சேர்ந்த பெண்மணிகள் தவருது பங்குபற்றிப் பலனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்ருர்கள்.

### விக்கார் ஜெனறல்

கொழும்பு அதிமேற்றிராசன விக்கார்ஜெனறலாய் இருந்துவந்தவரான அதிவண. ஜே. ஜமுவா சுவாமியவர்கள் தமது பதவியிலிருந்து இளைப்பாறித் தற்போது மருதானையிலே நவமாக ஆக்கப்பட்ட பாத்திமாநாயகி விசாரணைப்பங்குக் கட்டளைக்குருவாக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்ருர். இவர் அதிமேற்றிராசன விக்கார்ஜெனறலாகமாத்திரமல்ல, புரோக்கியூறேற்றர் ஜெனறலாகவும், அதிமேற்றிராசன பரிபாலனராகவும் மிக்கான திறமையுடன் கடமைபார்த்திருக்கின்ருர்.

### லங்காமாதா மகாலயம்

தேவத்தையிலுள்ள ஒறேஞ்ச்ஹில் எனும் குன்றின்உச்சியில் கட்டியெழுப்பப்படவிருக்கும் லங்காநாயகியின் பஸிலிக்காஎனும் மகாலயத்துக்குச் சென்ற ஞாயிற்றுக்கிழமை பகல் 10-30 மணிக்குக் கொழும்பு அதிமேற்றிராணியாண்டவரால் அத்திவாரக்கல் ஆசீர்வதித்து இடப்படலாயிற்று. இந்தவைபவத்தின் போது பதினையிரம் யாத்திரிகர்கள் வரையில் சமூகமாயிருந்தார்கள். இந்த மகாலயத்தைக் கட்டிமுடிக்கச் சுமார் ஐந்துலட்சம் ரூபா செலவேறபடும். இதில் மூன்றுலட்சம் ரூபா வரையில் ஏலவே சேகரிக்கப்பட்டுவிட்டது. மகாலயம் கட்டுவதற்கென 150 ஏக்கர் விஸ்தீரணமுள்ள றப்பர்தோட்டம் ஒன்று விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறது.

### கொப்பறவின் உயர்ந்தவிலை

கொழும்பிலே சென்றவெள்ளிக்கிழமை கொப்பறுவின்விலை மூன்னெருபோதுமே இல்லாதவகையிலே கண்டி ஒன்று 305 ரூபாவாக விலைப்படலாயிற்று. சென்றவருடம் ஆனிமாதம் கண்டிஒன்று 250 ரூபாவாக விலைப்பட்டதிமுதல் அதன்விலை படிப்படியாக ஏற்றமடைந்து தற்போது 305 ரூபாவாகியிருக்கிறது. இதிலே ஏற்றுமதிவரி 75 ரூபா அடங்கமாட்டாது. கடந்தசில வாரங்களிலே ஜேர்மனி அதிகமானதேங்காயெண்ணெய் வாங்கியிருப்பதும், தற்போதைய சர்வதேச நெருக்கடியானநிலைமையுமே கொப்பறுவின்விலையேற்றத்திற்கு முக்கிய க்காரணங்களாகும். இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் புதுத்தேங்காய்விலை ஆயிரத்துக்கு 450 ரூபாவாகவே இருந்துவருகிறது.

### அரைறுத்தல் மா

இலங்கையிலே மாவின்நிலைமை தற்போது சற்றே திருப்திகரமாயிருக்கிறது. அதனுல் சென்றதிங்கட்கிழமை முதல் ஒவ்வோர்கூப்பனுக்கும் வாரம் ஒன்றுக்கு அரைருத்தல்வீதம் கொடுபட்டுவருகிறது. இதற்குக்காரணம், கொள்ளைலாபம் அடிப்பதற்காக மாவைப் பதுக்கிவைத்திருந்து அகப்பட்டவர்களுக்குக் கோடுகளிலே சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதும், உபஉணவுப் பொருட்கள் பெருந்தொகையாகவந்து சேர்ந்ததுமே. பதினையாயிரம் பாகிஸ்தான் மாமூடைகள் சென்ற வெள்ளிக்கிழமைஇரவு கொழும்புவந்துசேர்ந்து, உடனேதானே அவைகளைக்கரையில் இறக்குவதற்கான ஏற்பாடுசெய்யப்படலாயிற்று. இனிமேல் ஒன்றரைமாதத்துக்குப்போதியமாவை எப்போதும் இருப்பிலே வைத்துக்கொள்ள உணவுப்பகுதி திட்டஞ்செய்திருக்கிறது. இருப்பிலே அதிகமானமா இருக்குமிடத்துகட்டுப்பாடில்லாதுசனங்களுக்குக் கொடுக்கப்படும்.

### கடற்படைக்கு அதிகாரம்

இந்தியாவிலிருந்துகளவிலேசாமான்கள் ஏற்றியிறக்குகிறவர்களையும், சட்டவிரோதமாகக் களவிலேவந்து இறங்குகிறவர்களையும் கண்டுபிடிக்குமாறு கடலில்வரும் கப்பல்களையும், வள்ளங்களையும் பரிசோதிப்பதற்கும், அவசியம் நேருமிடத்துக் கடலிலேயே அவர்களைக் கைதுசெய்வதற்கும் இலங்கைக் கடற்படைக்கு அதிகாரம் அருளப்பட்டிருக்கிறது. அதனுல் கடற்படைக் கப்ரினும், உத்தியோகஸ்தர்களும், கடலோடிகளும் தங்கள சொந்தக்கடமைகளுடன் ரேகுச்சேவையிலும் ஈடுபட்டு ரேகுப்பகுதி உத்தியோகஸ்தர்களின் அதிகாரத்தையும்கொண்டிருக்பார்கள். வடஇலங்கையின் கடல்களிலே களவிலே சாமான் ஏற்றியிறக்குகிறவர்களின் செயல்களைக் கட்டுப்படுத்தலே இந்தநடவடிக்கையாகும்.


## ஆண்டவர் சரித்திரம்

நமது அச்சியந்திரசாலையிலே விற்பனைக்குத் தயாராயிருக்கிறது.

முதலாம் பாகம் பிரதி விலை சதம் 90.

இரண்டாம்பாகம் பிரதிவிலை சதம் 90.



## CEYLON GOVERNMENT RAILWAY

### LEVEL CROSSING REPAIRS


The Level Crossing at 8 miles 75 chains 35 links (Railway-Mileage) Ragama South on the Kadawatta-Welisara Road, between Hunupitiya and Ragama Railway Stations will be closed for vehicular traffic as follows for effecting repairs :—

Totally from 12.00 midnight on Saturday, 17-2-51 to 3.00 a. m. on Sunday, 18-2-51.

Partially from 3.00 a. m. to 6-00 a. m. on Sunday, 18-2-51.


During the partial closure, traffic will be assisted over the level crossing.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாந்தைவடக்கு மன்னார்-விடத்தல்தீவுப் பாதையின் 6-ம்கட்டையடியில் (மாந்தைச்சந்தி) நவமாக அழகுற அமைக்கப்பெற்றிருக்கும் லூர்து கெபியில் லூர்துநாயகியின் திருநாள் 10-2-51 சனிக்கிழமை காலை 7-00 மணியளவில் திவ்விய பூசையுடன் முடிவாகும்.

Fr. JOHN SINGARAYAR
Adampan



# மூன்றாவது ஆண்டு ஞாபகம்

ஒருநாளுமே நீங்காத பெருநன்றிக்குரிய எமதருமையான பிறதாவர்கள் எம்மைப்பிரிந்து தமது பரலோக எசமானின் பதம்அடைந்த மூன்றாவது ஆண்டு இம்மாசம் 13-ந் திகதி செவ்வாய்க்கிழமை பூர்த்தியாகின்றது. ஆனல், அவர் எம்மைப்பிரிந்தபோதிலும் அவரின் அழியாதஞாபகம் நிழல்போல இன்றும் எம்மைவிட்டு நீங்காதிருக்கின்றது. தாம் அமலோற்பவ மரியநாயகிசபைப் பரித்தியாகிஎன்றமட்டிலே எம்மில் ஒவ்வொருவரிலுமே அவர் கிறீஸ்துநாதரைக் கண்டார். மரியாயின்பரித்தியாகங்களைப் புரிந்தார். தமதுகடைசிமூச்சுவிடுகிறவரைக்கும் எம்மை உள்ளன்பின் உருக்கத்துடன் நேசித்தார்.

எமதுகுன்றாத. அன்பிற்குரிய பிறதரவர்கள்மட்டில் எமதுகடமைஎன்ன? அவர்எம்மிடம் ஆசிப்பதென்ன? தம்மைநாம்எந்தநாளும் மறவாதிருக்க வேண்டும்என்பதா? அன்றேல் தம்மைப்புகழ்ந்து பேசிக்கொண்டும், போற்றி எழுதிக்கொண்டும் திரியவேண்டும் என்பதா? இல்லை. அவ்வாறாயின் அவர் விரும்புவதென்ன? அவர்எமது இருதயத்தில் ஊற்றிய பரிமளதைலத்தின்வாசனை குன்றாதிருக்க வேண்டும் என்பதே அவரின் தணியாத ஆசையாகும். அவர் பரலோகத்திலிருந்து எமதுஇருதயங்களுடன் சம்பாஷிக்கின்றார். தமதுதலைச்சன்பிள்ளைகள் ஆகிய அர்ச். சூசையப்பர்கூட்ட முதிய, வாலிப அங்கத்தவர்களுக்கு என்ன சொல்லுகிறார்?

எனதுஅன்பான முதற்கனிகளே! 49 வருடங்களாக நான்வாரந்தோறும் சொல்லிவந்த நன்மதிகளைப் பொன்னெனப்போற்றி வருகின்றீர்களா? மாதாந்த, வாராந்தக்கூட்டங்களுக்குச் சமுகங்கொடுக்கிறீர்களா? மாதத்தின் முதல்ஞாயிற்றுக்கிழமைகளில் பிறசமயச்சகோதரர்கள் மனந்திரும்பும்படியாகத் திவ்வியநன்மை பெற்றுவருகிறீர்களா? உங்கள்கூட்டத்தின்விருதுவாக்கியப்படி யேசுக்கிறீஸ்துவின் நல்ல சேவகனைப்போல் பிரயாசைப்படுகின்றீர்களா? எமது பரலோகஆண்டவள் எமக்கு முதுசமாகத்தந்த திருச்செபமாலையைத் தினமும் ஓதிவருகின்றீர்களா? நமதுபுத்தகசாலையிலிருந்து ஞானப்புஸ்தகங்களைப்பெற்றுவாசித்து வருகிறீர்களா? கூட்டமைதானத்தில் ஒன்றுகூடி விளையாடிவருகிறீர்களா?

உங்கள்இல்லங்களின் நடுநாயகமாக வீற்றிருக்கும் திருஇருதய இராசாவின் திருப்பிரதிமைமுன் உங்கள் சிறுவர்களுடன் முழந்தாட்படியிட்டுச் செபம்செபிக்கிறீர்களா? எங்கள் ஆசனக்கோவிலில் நடந்தேறும சுற்றுப் பிரகாரங்களிலும், தபசுகால ஞான ஒடுக்கங்களிலும் பங்குபற்றுகிறீர்களா? எங்கள்கூட்ட அங்கத்தவரில் ஒருவர் மரிக்கும்போது அவருக்குச் செலுத்த வேண்டிய கடைசிமரியாதைக்குச் சமூகங்கொடுக்கிறீர்களா? ஈற்றில் எங்கள் நேசச் சுத்தவாளராகிய சஞ்சூசையப்பரின் அடைக்கலத்திலே அவரதுதிருக்கூட்டத்தில் மரணபரியந்தம் நிலைகொள்வீர்களா?

மீண்டும் பிறதாவர்கள் தமது கனிஷ்டபிள்ளைகளாகிய அர்ச். அந்தோனியார்கூட்டப்பிள்ளைகளை நோக்கிச் சொல்லுகின்றார்: எனதுஅருமையான நேசபிள்ளைகளே! எனதுமுதற்கனிகளாகிய சஞ்சூசையப்பர்கூட்டப் பிள்ளைகளுக்குச் சொல்லியதையே உங்களுக்கும் சொல்லுகின்றேன். தவறியவர்களின் வழிகாட்டியாகிய கோடி அற்புதரிடம் உங்களை ஒப்படைத்து உங்கள்கூட்டத்துச் சிரேஷ்டர்மார், மூப்புமார்மட்டில் பூரணஅமைச்சல் உள்ளவர்களாயிருங்கள். அடுத்தபடியாக எனதுஉள்ளத்தைக் கொள்ளைகொண்ட நற்கருணைக்கூட்டப்பிள்ளைகளே! உங்கள்கூட்டப் புதிய முதலாளிமாராகிய கன்னியாஸ்திரிமார்களுக்கு அமைந்துவருகின்றீர்களா? ஒவ்வொருவியாழன், சனிக்கிழமைகளில் பூசைகண்டு திவ்வியநன்மை பெற்றுவருகின்றீர்களா? உங்கள் அருமையான ஞானத்தந்தை வண. எஸ். ஆசீர்வாதம்சுவாமியவர்கள் உங்களுக்கென எழுதிஉதவிய சிறுவர்நன்மை முயற்சிகளைப் பத்தியாகச் சொல்லிவருகிறீர்களா? "என் ஆண்டவளே! என தாயாரே!" என்றசெபத்தை இருதயத்தால்உணர்ந்து சொல்லுகிறீர்களா? உங்கள்கட்டளைச்சுவாமியார் உங்களுக்கு இடையிடையே இனிப்புப்பண்டங்கள் தருவாரென நம்புகின்றேன். உங்கள்அயலிலுள்ள சிறுவர்களையும் பூசைக்குக்கூட்டிவாருங்கள்.

எனதுஅந்தியகாலத்தில் எனக்கு ஆறுதலைத்தந்த திருமுகக்கூட்டப்பிள்ளைகளே! உங்களுக்கும் ஒருவார்த்தை. உதிரக்கண்ணீர்சிந்திய எங்கள் பரமஇரட்சகரின் திருநேத்திரங்களை உற்றுநோக்குங்கள். அதினின்று வீசும் சிநேகஒளியிலே உங்கள்இருதயங்களைத் திருப்புங்கள். கிறீஸ்துவ அடக்கஒடுக்கத்துக்குரிய உடைகளில் விழிப்பாயிருங்கள். வியாகுலவாளினால் குத்துண்ட எங்கள் நேசதாயாரின் மாசில்லாதஇருதயத்தின் மூலமாய் எங்கள்செல்வநாடு மனந்திரும்ப மன்றாடுங்கள்.

சென்வின்சென்ற் டி போல் தருமசபையின் காரியஅங்கத்தவர்களே! பஞ்சியையோ, அலுப்பையோபாராது வாராந்தக்கூட்டங்களுக்குச் சமுகமளியுங்கள். பரலோகத்திலே எங்களுக்குச் சாட்சிகளாகவரும் எங்கள்ஏழைகள்மட்டில் இரக்கமாயிருங்கள். வறியவர்களின் இல்லங்களையும், ஆஸ்பத்திரி, மறியற்சாலையையும் வாரந்தோறுந்தரிசியுங்கள். நத்தார்க்காலங்களிலே நற்கருணைப்பாலர்களையும், நல்லூர்மீசாமையும் மறக்கவேண்டாம். உங்கள்சகோதர பந்திகளுடன் ஒத்துழையுங்கள். எங்கள்மேற்றிராசனத்தில் பலதருமபந்திகள் ஆரம்பமாக முயற்சியுங்கள். தருமசீமாட்டிகள் சபைச் சகோதரிகளே! உங்கள்சபை ஆரம்பமானபோது காட்டியஊக்கத்தில் சற்றுமேசோர்வடையாது உதார சிந்தையுடன் உழையுங்கள்.

ஈற்றில், எனதுஅன்பான நன்மக்களே! உங்கள்எல்லாருக்கும் கிறீஸ்துவசமாதானத்தை விரும்புகிறேன். அர்ச். அந்தோனியாரின் தருமஅப்பத்தை ஒழுங்காய்அனுப்புங்கள். நத்தார்க்காலங்களிலே எங்கள்ஏழைகளை மறவாது அவர்கள்மேல் இரக்கமாய் இருங்கள். வியாழக்கிழமைதோறும் ஆசனக்கோவிலில் நடந்தேறும் நித்தியஆராதனையிலே எங்கள்நேசஆண்டவருக்கு ஆறுதல்அளியுங்கள்.

எனதுசின்னச்சிலுவைப்படைவீரர்களே! உலகமெங்கும் எங்கள்யேசு இராசாவின் திருச்சிலுவைக்கொடி நாட்டப்படும்படியாகஒறுத்தல்முயற்சிகள்செய்யுங்கள். எங்கள்பரிசுத்தபாப்பாசருக்காகவும், எங்கள்மேற்றிராணிமார், குருமாருக்காகவும் மன்றாடுங்கள். உங்கள்நித்திரையிலும், கனவிலும் 'யேசுவின் அதிபரிசுத்த இருதயமே, உமதுஇராச்சியம்வருக' என்னும் மனவல்லயச்செபத்தை நினைத்துக்கொள்ளுங்கள்.

இச்சுபசெய்திகளே எமதுஅன்பான பிறதர் உங்களுக்களிக்கும் சமாதானத்தூதுகள், நன்மதிகள். இவைகளைத்தான் அவர் எங்கள்மட்டில் விரும்புகின்றார். மேலேதரப்பட்டவைகளை அவரவர் நிறைவேற்றிவருவார்களேயானல் எமதுபிறதர் எமக்குச் செய்தவைகளுக்கெல்லாம் நாம்பதில் நன்றி செய்தவர்களாவோம்.

L. C. P.

## துயில்காள் கூவுங்கள்!

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

அன்னார்பெற்ற தெளிவுஇன்பம் பெறுதல்வேண்டும்.

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்" என்றார் பாரதி. உள்ளத்தில்ஊறும் ஆழ்ந்தசமய உணர்வின் காரணமாக நமது வாக்கினில் இனிமைமுகிழ்க்கும் புத்தப்புதுவசந்தம் பூத்துக்குலுங்கும் புதுமைத்தமிழகத்தின் வசந்தகால எழில்நலத்தில் கூவித்திரியும் பெருவாழ்வுபெற்ற இளங்குயில்கள் நமது இளைஞர்கள். 'தமிழ்' என்ற சொல்லுக்கே இனிமை என்பது தான் பொருள். வள்ளுவன் வகுத்த வளமார் அறமும், இளங்கோவின் இன்கவித்தேனும், சங்கத்துச் சான்றோரின் நலம்சால் உலகப்பொதுக் கருத்துக்களும், கடல்மடையெனப் பாய்ந்தோடச செந்தமிழ் வளம்கொழித்த தமிழகம் அல்லவா இது? நெற்றிக்கண்ணைச் சீறிய கீரனும், சோழப் பேரரசனைச் சீறியகம்பனும்போன்ற கவிவீரர்கள் தோன்றிய நாடல்லவா இது? கட்டபொம்மனும், சிதம்பரம் பிள்ளையும்போன்ற உள்ளுரம் வாய்ந்த, நாட்டுணர்ச்சிமிக்க பெருவீரர்களை ஈன்றதமிழகம் அல்லவா இது? தமிழுக்கும், தமிழ்ப்புலமைக்கும் வளம்வழங்கிய வள்ளல்கள்பலர் தோன்றியநாடு அல்லவா இது? இன்னோரன்ன வளம்சால் தமிழ்முன்னோர்களின் மரபில்வந்த தமிழர் நாம். சமயத்தால் நாம் கத்தோலிக்கர். பண்பால் நாம் தமிழர். சமயப்பண்பும், தமிழ்ப்பண்பும் இணைந்தே வருங்காலத் தமிழகக் கத்தோலிக்கம் உருவாதல்வேண்டும். இத்துறையில் நமக்கு வழிவகுத்த பெரியார்கள் பலர்.

அவருள் முதல்வராக, நல்லூர்—ஞானப்பிரகாசஅடிகளாரைக் குறிக்கின்றேன். அடிகளார் கத்தோலிக்க துறவுநிலையில்நின்று, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நல்லூரில் சமய அறம் பரப்பிய நல்லார். சமயத் தொண்டோடு அமையாது, தன் தாய்மொழியாம் தமிழுக்கும் சீரிய தொண்டுகள் ஆற்றி பெருந்தகையார் அவர். தமிழ் மொழியின் சொற்பிறப்பாராய்ச்சியிலே துறைமுற்றிய சொற்செல்வர் அந்நல்லூர் நல்லார். தமிழ்மொழியின் தொன்மைச் சிறப்பினை நிலைநாட்டியபெருமை அடிகளார்க்கேஉரியது. ஆழ்ந்த சமயஉணர்வால் தான் பெற்ற அறிவுத் தெளிவோடு, இனிமை பொங்கும் தமிழிசையும் எழுப்பி வாழ்ந்தது, சிலபல ஆண்டுகளுக்குமுன் அந்நல்லூர்க்குயில். மேலும் சிலகுயில்களைக் காண வேண்டுங்கொல்? பெஸ்கி அடிகளார் (உணர்வால் தமிழரே அவர்.) வேதநாயகனர், கிருஷ்ணப்பிள்ளை போன்ற பெருங்குயில்கள் தெளிவும், இனிமையும்பொங்கக் கூவின இத்தண்டமிழ்நாட்டிலே.

அவர்களின் வழித்தோன்றல்களாகவந்த கத்தோலிக்க தமிழ் இளைஞர்காள்! உணர்வுபெறுங்கள், சமயப்பற்றும், தமிழ்ப்பற்றும் வீறிடுக உங்கள் உள்ளங்களிலே. சமயஉண்மைகளை ஆழ்ந்து பயிலுங்கள். தமிழ் மொழியினை ஆழ்ந்துகல்லுங்கள். தெளிவும் இனிமையும் பெற்ற குயில்களெனக் கூவுங்கள். புதுமைத்தமிழகத்திலே இளங்குயில்காள்! கூவுங்கள். சமயமும் தமிழும் குழைத்துத் தெளிவும் இனிமையும் மணக்கக்கூவுங்கள்.

(நல்லாயன் பொன்மலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## பிரஜா உரிமைக்குப் பங்கம் விளைக்கமாட்டோம்

வாஷிங்ரன்— தை 24

"அமெரிக்காவுக்கு உன்னதம்அளிப்பது அதிகடைப்பிடிக்கும் ஜனநாயக தர்மமேயாகும். அதிலே அதுசற்றும் வழுவாது. கம்யூனிஸ்தசதிகளைத் தடுப்பதற்காக இரகசிய வேட்டையாடும் உத்தேசம்இல்லை." இவ்வாறு அமெரிக்கநீதிமந்திரி ஹோவார்ட் மெகிராத் அழுத்தமாகக் கூறுகின்றார். ஸ்பிறிங்பீல்டில் பேசத்தயாரித்த இந்த உரையில் அவர்மேலும் குறிப்பிடுவதாவது: "பிரஜாஉரிமைக்குப் பங்கம் நேர விடமாட்டோம். அமெரிக்காவின் உயரியசம்பத்து அதன்விடுதலை உணர்ச்சியேயாகும். மற்ற நாட்டுமக்களிடையே ஆன்மீகதலைமை ஓரளவு ஏற்பட்டிருப்பதற்கு அதுவே முக்கியமான பிரத்தியட்சசான்று. அதுவே நமது பணப்பலத்தைக்காட்டிலும் உயரிய சான்று. ருஷியாவிடம் ஆளும், யந்திரமும், ஆறுகளும், மலையும் ஏராளமாய்இருக்கலாம். ஆனால், நமதுபாரம்பரை ஜனநாயகச்செல்வம் ருஷியமக்களிடம் பூச்சியம். அமெரிக்காராகிய நாம் மடையர்களல்ல. வலுச்சண்டைக்குஇழுத்தால் நாம் தயார்."

## வல்லவர்களிடம் வாயடி பலிக்காது

வாஷிங்ரன்— தை 24

அமெரிக்கஇராசாங்க பொதுஅலுவல் பகுதித்தலைவர் எட்வாட் டபிள்யூ. பாரட்அவர்கள் செய்தி நிருபர்களின் பேட்டியில் கூறியதாவது: "கம்யூனிஸ்தர்களின் 'சமாதானப்போராட்டம்' ஆஷாடபூதித்தனம்அல்லாதுவேறல்ல. சமாதானம்என்னும் வார்த்தையைக் கையாடிச் சுதந்திரமக்களைக் குழப்பி அடிக்கவும், அவர்களின்உறுதி, வல்லமை, தன்னம்பிக்கை ஆகியவற்றைக் குலைக்கவுமே கம்யூனிஸ்தர்கள் தலைப்பட்டிருக்கிறார்கள். சோவியத்ருஷியாவின் சமீபகாலநடப்புகளை ஊன்றிக்கவனித்தால் ஓர்உண்மை தெற்றெனவிளங்கும். அதாவது, அவர்கள் ஆக்கிரமிப்பைத்தொடங்குமுன் போலிச்சமாதானகூச்சல் பிரமாதமாகப் போட்டிருக்கிறார்கள். வடகோறிய ஆக்கிரமிப்புத்தொடங்குமுன் 'ஸ்றொக்கோம் சமாதானமனு'வெளியாகியது. அந்த ஆக்கிரமிப்புக்குக் கம்யூனிஸ்தசீனா துணைசெய்யத் தொடங்குமுன் 'வார்சோ சமாதான காங்கிரஸ்'கூட்டிக் கம்யூனிஸ்தர்கள் தடபுடல் செய்தனர். இதற்குச் சரியானபதில், சுதந்திரமக்கள் தக்கஇராணுவ, பொருளாதார வல்லமை பெறுவதேயாகும். வல்லவர்களிடம்கம்யூனிஸ்தர்களின்போலிச் சமாதான வாயடிபலிக்காது."

## கம்யூனிஸமும் கோறியர்களும்

நியூயோக் — தை 25

"கோறியாவில் கம்யூனிஸ்தபிடியிலுள்ள பகுதிகளிலிருந்து அலைஅலையான சனக்கூட்டங்கள் ஐ. நா. வசமுள்ள பகுதிகளுக்குத் தப்பியோடி வருகின்றன. இது கம்யூனிஸ்தஆட்சியில் கோறியமக்களுக்குள்ள வெறுப்புக்குக் கண்கண்டசான்றாகும். இது ஓர்மௌனமான சர்வசனவாக்கெடுப்புமாகும்" என்று 'வால் ஸ்றீன்' எனும் பத்திரிகையில் திரு. வில்லியம் எச். சேம்பர்லின் எழுதுகிறார். மேலும்அவர் எழுதுவதாவது: "வடகோறியாவிலே சண்டைபரவியபோது கம்யூனிஸ்தர்களின் ஆதிஷ்டத்தைப் பகிர்ந்துகொள்ள இப்படிப் பெருந்திரளானமக்கள் இடம்பெயர்ந்ததாகக் கேள்விப்படவில்லை. சரியான காரணமின்றிக் குழந்தைகளையும், மூட்டை முடிச்சுகளையும் முதுகில் கட்டிச் சுமந்துகொண்டு சனங்கள் இடம்பெயரமாட்டார்கள். அதுவும் கம்யூனிஸ்தர்கள் உள்ள பக்கத்திலிருந்துதான் மக்கள் தப்பியோடுகிறார்கள். இது வெறுப்பையே குறிக்கிறது. கோறியாவில் மட்டுமல்ல, கம்யூனிஸ்த ஜேர்மனியிலிருந்தும் சுதந்திரஜேர்மனிக்குள் சுமார் 12 லட்சம் ஜேர்மனியர்கள் தப்பிவந்துள்ளனர். ஏன்? கம்யூனிஸம் அதிகாரத்திற்குவந்த 33 ஆண்டுகளாக ருஷியாவிலிருந்தே எண்ணற்ற அகதிகள் — குறிப்பாக ருஷிய போர்வீரர்கள் ஆட்சியின்கோரம் பொறுக்கமாட்டாமல் வெளியேறிக்கொண்டிருக்கின்றனர்."

## விஷங்கக்கும் பிரசாரம்

நியூயோக் — தை 25

சனநாயக நாடுகளைப்பற்றி,—குறிப்பாக அமெரிக்காவைப்பற்றிப் பொய்யும், பித்தலாட்டமும்பரப்பி, இளகிய மனமும், அன்பெண்ணமும் படைத்த சீனமக்களிடையே வெறுப்பைத் தூண்ட 75,000 பிரசாரகர்களைக் கம்யூனிஸ்தசீனா தயார்ப்படுத்தியுள்ளது. இவர்களிலே வடமஞ்சூரியாவிற்கு 30,000 பேர்களாம். இவர்கள் கம்யூனிஸ்த பிரசாரமுறைகளில் ஊறியவர்கள். "மக்களின்சிந்தனையைச் சீர்குலைத்து நஞ்சைஊட்டி நெஞ்சம் கொதிக்கவைக்கும் கம்யூனிஸ்த சீனாவின் தீயபிரசாரத்தைச் சகிக்கமுடியாது" என 'நியூயோக் ரைம்ஸ்' மேற்கண்டதகவலைக்குறித்து எழுதியிருக்கிறது.

## "மோதினல் பிராணபத்து"

வாஷிங்ரன் — தை 25

"அமெரிக்காவின் இராணுவ வல்லமையை ஆராஅமரஉணராமல், உலகைக்கட்டியாளச் சோவியற் அரசு முயற்சித்தால் அதன்விளைவுகள் சோவியற்அரசுக்குப் பிராணபத்தாக முடியும்" எனப் பிரபலஎழுத்தாளர் திரு. வால்ற்றர் லிப்மன் புத்திமதிகூறுகிறார். மேலும்அவர் கூறுவதாவது: "அடுத்த 18 மாதங்களில் அமெரிக்கா தனது விமானப்பலத்தை மாபெரும்அளவிற்குத் திரட்டப்போகிறது. பைத்தியக்கார ஹிற்லருக்குத்தானும் வலிமையில் மிஞ்சியவர்க்குஎதிராய்ப் போர்தொடுக்கும் துணிவுஇருந்திராது. சோவியற் அரசின் நலபலன்கள் சம்பந்தப்பட்டவரைக்கும் விவேகியான ஸ்ராலின் இனிக்கடைப்பிடிக்கச் சீரானவழி ஒன்றேயொன்று உண்டு. அதாவது அமெரிக்காவின் இராணுவ வலிமை தெரியாமல் அத்தோடு வாலாட்டவோ அல்லது அதை இன்னமும் ஆத்திரமூட்டவோகூடாது. ஸ்ராலின் தானே அடிக்கடிசொல்வதுபோலச் சேர்ந்துவாழும்கொள்கையைச் செயற்படுத்த உடனேமுற்படவேண்டும். "அமெரிக்காவைஆள்வது யுத்தப்பித்தர்கள் என ருஷியா காடியாகக்கத்துகிறது. இது நிசமாயிருக்கலாமென நம்புகிறவர்கள் நமதுகூட்டாளிகளிடையேயும், நடுநிலைமைவாதிகளிடையேயும் இருக்கிறார்கள். அமெரிக்காவைஆளுகிறவர்கள் யுத்தப்பித்தர்கள்அல்ல. தாஜா பண்ணுகிறவர்களும் அல்ல."

## ஹிற்லர்போன அழிவுப்பாதை

வாஷிங்ரன் — தை 29

"ஹிற்லரும், கெய்ஸரும் அமெரிக்காவைப் பிழையாகமதித்ததுபோலக் கம்யூனிஸ்த எதேச்சாதிகாரத்தின் தலைவர்கள் செய்யக்கூடாது" எனக் காலஞ்சென்ற ஜனாதிபதி றூஸ்வெல்ற்அவர்களின்ஞாபகார்த்தமாக அன்னாரது ஜனனதினத்தன்று (தை 30) அமெரிக்க ஜனநாயக செயலாளர்கழகம் ஆண்டுதோறும்நடத்தும் விருந்துபசாரத்திற்கு ஜனாதிபதி ட்றூமன் அவர்கள் அனுப்பியுள்ளசெய்தியில் குறிப்பிட்டிருக்கிறார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது: சோவியற்அரசு காடியாகக் கத்துவதுபோல, அமெரிக்கஐக்கியதேசம் பிளவுபட்டோ அல்லது பலத்தாழ்வுற்றோ இருக்கவில்லை. உளவலிமையோ, பொருளாதாரவலிமையோ மங்கியநிலையில் நாம் இல்லை. அமெரிக்கஐக்கியதேசம் ஒன்றாய், உறுதியாய்நிற்கிறது. சுதந்திரமக்களாகச் செயலாற்ற நாம் கங்கணம்கட்டிக்கொண்டுள்ளோம்.

## அமெரிக்க - பிரான்சிய நேசப் பிணைப்பு

வாஷிங்ரன் — தை 30

ஆக்கிரமிப்புக்குஎதிராகப் போராடும் ஐக்கியநாடுகளின்கரங்களை மேலும் வலுப்படுத்துவதே பிரான்ஸ், அமெரிக்கா இரண்டினதும் பொதுவான கொள்கை என்று இங்கு இன்று தேசிய பத்திரிகையாளர்சங்கத்தில் பேசுங்கால், பிரான்சிய பிரதமமந்திரி திரு. பிளெவன்அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார். அமெரிக்க, பிரான்சிய நேசப்பிணைப்பு என்றும் சிரஞ்சீவியாயிருக்கும். அதைக் குலைக்கப்பார்க்கும் எதையும் நாம் அனுமதிக்கவேமாட்டோம். பிரான்சுக்குள் அமெரிக்க ஆயுதஉதவி வந்திறங்குவதைத்தடுக்கக் கம்யூனிஸ்தர்கள் எவ்வளவோமுயற்சித்தனர். ஒன்றும்பலிக்கவில்லை என்று அவர் மேலும் கூறினார்.

## இத்தாலிய கம்யூனிஸ்த தலைவர்

நியூயோக் — தை 30

இத்தாலிய கம்யூனிஸ்த கட்சியின் "கைதேர்ந்த" தலைவர்களில் ஒருவரான வால்டோ மக்னனியும், அவரதுசகாக்களும் கம்யூனிஸ்தகட்சியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளனர். இச்செய்தியை "நியூயோக் ரைம்ஸ்" பத்திரிகையின் றோமைநகர்நிருபர் தருகிறார்: மஸ்கோவுக்கு மண்டியிடும் கொள்கையைக் கண்டித்து மக்னனி கோஷ்டியார் வெளியேறியுள்ளனர். "இத்தாலியை யார்தாக்கினாலும் சகியோம். தாய்நாட்டைக் காப்பது முதற்கடமை. ருஷியாவிடம் அனுதாபம் காட்ட வேண்டியதுதான். ஆனால், அதற்குப் பிரத்தியேகமரியாதை கூடாது. அதையும், மற்றநாடுகளில் ஒன்றைப்போலவே கருதவேண்டும்" என மக்னனி சுயேச்சையுணர்ச்சியுடன்கூறியதைப் பொறுக்கமாட்டாமல் கம்யூனிஸ்த தலைமைக்காரியாலயம் அவரைக் "குற்றவாளி" எனத் தீர்ப்புச் சொல்லிற்று. ஆட்சேபக் கூச்சல் அடங்கியபிறகு மக்னனியைக் கழித்துக்கட்டிவிடலாம்எனக் கம்யூனிஸ்த தலையிடம் எண்ணியது. ஆனால், அதற்கு முந்திக்கொண்டு மக்னனி இராஜினாமாவை அனுப்பிவிட்டார். இவர்காரியம் தற்போது மஸ்கோவிலுள்ள இத்தாலிய கம்யூனிஸ்த தலைவர் டோக்ளியாட்டியின் செல்வாக்கை மங்கச்செய்யும் எனக் கருதப்படுகிறது.

## ஐஸன்ஹோவர் நம்பிக்கை

வாஷிங்ரன்— மாசி 1

சனநாயகத்தைக் காப்பதற்கு மேற்குஐரோப்பாவைப் பாதுகாப்பது இன்றியமையாததுஎன்றும், ஐரோப்பியர்கள் துணிந்துசெயலாற்ற ஆர்வம் கொண்டிருக்கிறார்கள் என்றும் ஜெனறல் ஐஸன் ஹோவர்அவர்கள் அமெரிக்ககாங்கிரஸ்சபைமுன் பேசுங்கால் அறிக்கைசெய்திருக்கிறார்: ஐரோப்பாவில் நிறுவப்பட்டுவரும் கூட்டுப்பாதுகாப்புச் சர்வசேனாதிபதியானஇவர் மூன்றுவாரகாலம் வடஅத்திலாந்திக் ஒப்பந்தநாடுகளைச் சுற்றிப்பார்த்துவிட்டு இப்போது தமதுமுதலாம்அறிக்கையை வெளியிட்டுள்ளார். "அமெரிக்கா தனதுகுறித்தபடைகளைக் கவனமாக ஐரோப்பாவுக்கு அனுப்பவேண்டும். ஆயினும், ஐரோப்பா என்ன செய்கிறதுஎன்பதை ஒப்பிட்டு நிதானித்தே அதைத் தீர்மானிக்கவேண்டும்.... இன்று மிகஅத்தியாவசியப்படுவது சாதனமே. இதை விரைவில் அளிக்கவேண்டும்" என அவர் தெரிவித்துத் தமதுமுடிவுரையில் குறிப்பிட்டதாவது: "அமெரிக்காவின் நோக்கம் என்ன? அது என்னசெய்கிறது? இந்த உண்மையை உலகறிய எடுத்துச் சொல்லவேண்டும். விடுதலை, சனநாயகம் ஆதியஇவற்றைக்காப்பதே அமெரிக்காவின்குறிக்கோள். இதை அகிலமறிய எடுத்துச்சொல்ல இன்னும்அதிக வலிமைவாய்ந்த தகவல்வினியோக ஏற்பாடுவேண்டும். அதை நான் பிரசாரம் என்று சொல்லமாட்டேன். உயரிய லட்சியத்திற்கு உண்மையாக நாம் உழைப்பது அனைவருக்கும் தெரியவேண்டும். உலகில் ஆக்கிரமிப்பு பயமுறுத்தல் இருக்கும்வரைக்கும் — 20 வருடமோ, 30 வருடமோ எவ்வளவுகாலம் இருக்குமானாலும்சரி — தக்க தற்காப்புஏற்பாட்டைக் கண்டுபிடித்தாகவேண்டும். அதற்கு நாளைப் பின்போடக்கூடாது. இன்றேஅதைச் செய்யவேண்டும்."

---


## மாதகல் துறை
## பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள்

இவ்வருஷம் பரிசுத்த லூர்துநாயகியின் திருநாள் மாசிமாதம் 8-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் 18-ந் திகதி காலை அதிசிறப்பாக முடிவாகும்.

17-ந் திகதிசாயந்தரம் 7 மணியளவில் பரிசுத்த லூர்துநாயகியின் திருச்சுரூபம் சென் தோமஸ் ஆலயத்திலிருந்து ஆடம்பரவைபவங்களுடன் மெழுகுவர்த்தித் தீபஅலங்கார சுற்றுப்பிரகாரமாகத் திருக்கெபிசெல்ல, அங்கே மகாவந். மேற்றிராணியாண்டவரவர்களால் வேஸ்பரென்னும் மாலையாராதனை பாடப்பெற்றுச் சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்படும். மறுநாட்காலை மகாவந். மேற்றிராணியாண்டவரவர்களால் பாடற்பூசை நிறைவேற்றப்படும்.

[யாத்திரிகட்கேற்ற சகல வசதிகளுமுண்டு.]

கட்டளைக்குரவர், மாதகல்.


---

வில்லி—பப்பா! இன்னமும் நீங்கள் வளர்ந்துகொண்டுதான் இருக்கிறீர்களா?

பப்பா—இல்லையே, நான் கிழவனாகிவிட்டேன். இனிவளரமாட்டேன். நீ எதற்காக அப்படிக் கேட்கின்றாய்?

வில்லி—இல்லை பப்பா! ஒன்றுக்குமில்லை. ஆனால், தங்கள் உச்சந்தலை மயிருக்குமேலாக வந்துகொண்டிருக்கிறதே. அதற்காகத்தான் கேட்டேன்,

* * *

வில்லி—பப்பா, நீங்கள் சாராயம்குடிக்கும்போது ஏன் இரண்டுகண்ணையும் மூடிக்கொள்ளுகிறீர்கள்?

பப்பா—மகனே! டக்றர் சொல்லியிருக்கிறார், தண்ணீரைத்தவிர வேறே எந்தக்குடிவகையையும் கண்ணாலேபார்க்கக்கூடாதென்று. அதனால்தான் அப்படி மூடிக்கொள்ளுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mal. . No. 477. Eng.

### உலகசரித்திரத்தில்
## மலேரியாச் சுரங்கள்

யுகக்கணக்கான காலமுழுவதிலுமே மலேரியா மனிதவர்க்கத்தின் கொள்ளை நோய்களில்ஒன்ருய் இருந்துவந்திருக்கிறது. பழையஏற்பாட்டிலும்-புதிய ஏற்பாட்டிற்தானுமுள்ள வாக்கியங்களிலே சுரங்கங்களைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நுளம்புகளின் வாசஸ்தலமாகிய உட்டண சுகாத்தியத்துடனும், மிகுந்த சதுப்பு நிலங்களுடனும்கூடிய தேசத்தின் இயற்கையை ஆராயுமிடத்து, சுரத்தைப்பற்றி மீட்டும்மீட்டும் குறிப்பிடப்பட்டிருப்பதானது, அடிக்கடி உண்டாகும் மலேரியாவையே குறிக்கிறதென்று இலகுவில் அனுமானித்துக் கொள்ளலாம்.

உலகின் ஏனையபகுதிகளில்தானும் மலேரியாவின் அறிகுறிகளைக் குறிப்பிடுவதுபோன்ற ருறித்த ஓர்அடையாளம்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பேரான உலாந்தசித்திரக்காரரான அல்பேட்றேர்என்பவர் 16-ம்நூற்ருண்டின் ஆரம்பத்திலே சீலண்ட் எனும் உலாந்தமாகாணத்தைத் தரிசித்தார், அவர் தமதுபத்திரிகையிலே தாம் சித்திரை 4-ந்திகதிமுதல் சித்திரைமதம் 14-ந்திகதிவரையில் சாதாரணகளையும், கடினதலைக்குத்துமாகிய இரண்டுடனும்கூடிய கொடியசுரங்கண்டு வருந்திக்கிடந்ததாக எழுதியிருக்கின்ருர்.

"மக்களின் கவிஞ"ரால் இயற்றபட்ட "தகப்பன் பூனைகள்" என்றகவியிலே அதுபோலும்சிலவற்றை நாம் படிக்கின்ருேம். இந்தக்கவிஞர் 17-ம் நூற்ருண்டிலே ஓர்சுரத்தையிட்டு மனஞ்சலிக்கும்வகையிலே ஓர் புலம்பல் எழுதிவிட்டிருக்கின்ருர். அந்தச் சுரத்தாலே குறிப்பிட்டகாலங்களில் அவர் பீடிக்கப்பட்டிருக்கின்ருர். ஓர்கால் மலேரியாகண்டு வருந்துமிடத்து இங்குள்ளநாமும் புலம்பவேண்டிவருவது முற்றும்இயலாததன்று.

இந்தக்காலத்திலும், இந்தயுகத்திலும் அத்தகையஓர்புலம்பலை எழுதுவதிலே கவிஞர்கள் தங்கள்திறமையைச் செலுத்தவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், மலேரியா இன்னுமே பரந்தபோதிலும் இந்தநோயைத் தடுத்துவைக்கக் குயினைன்எனப் பெயரிய ஓர்பலிதமான மாற்றுமருந்து கண்டறியப்பட்டிருக்கிறது.

மலேரியாக்கால முழுவதிலும் அதுவராமல்தடுக்கும் ஓர்நடவடிக்கையாகத் தினமும் 6 கிறேய்ன்குயினைன் அருந்திவாவேண்டுமென்றும், மலேரியாகாணுமிடத்து 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன் குயினைன் அருந்தவேண்டுமென்றும் முந்திய சர்வதேச சங்கத்தால் நியமிக்கப்பட்ட மலேரியாநிபுணர்களின் கம்மிற்றியால் 1938-ம் ஆண்டு வெளியிடப்பட்ட அதன்அறிக்கையிலே சிபாரிசுசெய்யப்பட்டிருக்கிறது.

---

### அர்ச். வனத்து அந்தோனியார்
## திருநாள்
### கருக்குப்பனை

சலாபத்தைச்சேர்ந்த கருக்குப்பனை என்னும்கிராமத்திலே அர்ச். வனத்து அந்தோனியார்திருநாள் சென்றமாதம் 28-ந்திகதி வழமைபோலச் சிறப்பாகக் கொண்டாடப்படலாயிற்று. திருநாளையிட்டு ஆலயஉட்புறமும், சுற்றுப்புறமும் மின்சாரதீபங்களாலும் பன்னிறத்துவசங்களாலும்நன்கு அலங்கரிக்கப்பட்டுத் தேசோமயமாய் விளங்கின. 23-ந்திகதிமுதல் வண. நீக்கிலாஸ் குரூஸ் சுவாமியவர்களால் பயபக்திக்குரியவிதமாய் ஒரு ஞானஒடுக்கம் போதிக்கப்பட்டது. 27-ந்திகதி சனிவாரம் சாயந்தாம் பலநூற்றுக்கணக்கான விசுவாசிகளும், பிறசமய நண்பர்களும் சமூகமாக, வண. நீக்கிலாஸ் குரூஸ்சுவாமியவர்களும், கட்டளைக்குரவர் வண. கொட்வின் பர்ஞண்டோ சுவாமியவர்களும் உதவிபுரிய அதிவண. மைக்கல் பெரோராசுவாமியவர்களால் வேஸ்பர் பாடப்பட்டது. 26-ம் 27-ந்திகதிகளிலே சாயந்தரவேளைகளில் இவ்வூர்க் கிறீஸ்தவர்களால் ஆலயத்தின் முன் அமைக்கப்பட்டிருந்த மண்டபத்தில் அர்ச். வனத்துஅந்தோனியார் சரிதை டிருமாவாகநடித்துக் காண்பிக்கப்பட்டது. 28-ந்திகதி ஞாயிறன்று காலை வண. நீக்கிலாஸ் குரூஸ்சுவாமியவர்கள் பாடற்பூசைநிறைவேற்றி அரியதோர் பிரசங்கமுஞ்செய்தனர். பின்னர் திருச்சுரூபசுற்றுப்பிரகாரம் நடந்து சுரூபஆசீர்வாதத்துடன் திருநாள் சுபமே முடிபெய்தியது.

எம். வி. லெம்பட்

---

## வருடாந்தஉற்சவம்
## நரக்களி

பண்டைச்சரித்திரவாலாற்றை ஆராயும்போது நார்களித்த இடமென்னும் பொருள்படுவதும், தற்காலஇயற்கைச் சூழ்நிலையை உற்றுநோக்கும்போது நரைநீறமான களித்தரையை உடைத்தாய்இருப்பதுஎன்ற கருத்தைத் தருவதுமாய்ப் புத்தளத்தைச்சேர்ந்த அக்கரைப்பற்று வடக்கிலிருக்கும் நரக்களிக்கிராமத்தின்கண் கிருபாசனங்கொண்டெழுந்தருளியிருக்கும் வீரத்தளபதியான அர்ச். செபஸ்தியாம் முனிவர் ஆலயத்திலே ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டுவரும் மகோற்சவமானது இவ்வாண்டும் சென்ற 19-1-51 வெள்ளிக்கிழமைகொடியேற்றத்துடன் ஆரம்பமாயது.

பத்தியருட்சியாக நடந்தேறிய நவதினவிழாக்கள் நடைபெற்றபின் வெண்துகில்களாலும், மின்சார விளக்குகளாலும் அலங்கரிக்கப்பெற்றுச்சுவர்க்கநகரென விளங்கிய ஆலயத்தின்மத்தியில் தீவர்த்திகளாலும், நறுமணங்கமழும் பசியபூச்செண்டுகளாலும் சிங்காரிக்கப்பட்டு ஜெகஜோதியாகக்காட்சியளித்த பதுமபீடத்திலே 27-1-51 சனிக்கிழமை மாலை 8 மணிக்குப் பன்னிருசீஷர்கள் புடைசூழக் கட்டளைக்குரவர் வண. எஸ். விசுவாசம் சுவாமியவர்கள்பிரவேசித்து மாலையாராதனையைப் பாடினர்.

நரக்களிக் கத்தோலிக்கதமிழ்ப்பாடசாலைப் பாடகர்கோஷ்டியின் இனிய தமிழ், இலத்தின்கீதங்களின் இசையும் வாத்தியங்களின்இசையும் பத்தியையும், பரவசத்தையும் அளித்தன. மாலையாராதனை முடிவானதும் ஊர்ப்பெரியார்கள், பொதுமக்கள்திரண்டு கட்டளைச்சுவாமியாரைக் குருமனையில் சந்தித்துத் தெட்சணைகள்வைத்துப் பணிந்தனர். ஊர்மக்களின் உற்சாகத்தையும், ஒத்துழைப்பையும் அவர் வியந்துபாராட்டிச் சமயோசிதமாக அரும்பெரும் புத்திமதிகள்கூறி ஆசியளித்தனர்.

மறுநாட்காலை 8·30 மணிக்கு அறுநூற்றுக்குஅதிகமான பக்தர்குழாம் சமூகமாகச் சுவாமியார் பாடற்பூசை நிறைவேற்றினர். பூசையின்போது அர்ச். செபஸ்தியாரின் மகிமையைக் குறித்து அவர்செய்தபிரசங்கம் பெரிதும் அருட்சிக்குரியதாய்இருந்தது.

பூசைக்குப்பின் திருச்சுரூபம் இரதத்தில்பவனிகொண்டு செல்லப்பெற்று ஆலயத்துட் பிரவேசித்ததும் சுவாமியார் திருச்சுரூபத்தைக் காத்தேந்தி வேண்டுதல்செய்துநின்ற பக்தர்குழாமிற்கு ஆசீர்வாதம்அருளியதும் 12 மணிக்கு மங்கலமகோற்சவம் இனிதே முடிவெய்தியது.

---

### பாலைதீவு
# அர்ச். அந்தோனியார் திருநாள்
# 25—2—51



இத்திருநாள் மகோற்சவம் மாசிமாதம் 20-ந்திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை முடிவாகும். 24-ந்திகதி சனிக்கிழமை அர்ச். அந்தோனியார்திருச்சுரூபம் வீதிகொண்டு சுற்றுப்பிரகாரம் நடைபெறும். ஞாயிற்றுக்கிழமை காலை 4-30 மணிக்கும், 7 மணிக்கும் திவ்வியபூசைகள் நிறைவேறும். யாத்திரிகரின் ஞானகடமைகளைக் கவனிப்பதற்குப் பலகுருப்பிரசாதிகள் திருப்பதியிலே சமுகமாயிருப்பார்கள்

1-வது பெரியகடல் லைசென்சுள்ள மோட்டர்லான்சுகளுக்கு மாத்திரம் பாலைதீவுக்குப் பிரயாணஞ்செய்ய லைசென்ஸ் கொடுக்கப்படும.

2-வது **வத்தைகளிலும், மோட்டர்லான்சுகளிலும் லைசென்ஸின்படி பிரயாணிகளை ஏற்றவேண்டும்.**

3-வது தண்ணீர் துறைவாயிருப்பதினுல் கூடியளவு வத்தைக்காரரும், யாத்திரிகரும் தண்ணீர்கொண்டுபோகக் கடவார்கள்.

4-வது **செபமாலைக்கடைகளும், தேநீர்—உணவுக்கடைகளும் மாத்திரமே கட்டலாம்.**

5-வது கடைகட்ட விரும்புகிறவர்கள் கட்டளைச்சுவாமியாரிடம் உத்தரவு கேட்கவேண்டும், தீன்பண்டங்களைக் கண்ணுடிப்பெட்டிகளில் வைத்துக்காப்பாற்றவேணடும்.

**இந்தக்கட்டளைக்கு அமையாதவர்களின் உணவுகள் இவ்வருடமுதல் பறிமுதலாக்கப்படும்.**

### துக்கப்பாடற்பூசை

பலவருடகாலமாகப் பாலைதீவுயாத்திரிகர்களுக்குப் பலவிதஉதவிகள் புரிந்துவந்து சென்ற 6-7-50-இல் காலஞ்சென்றவரான திரு. J. யோசேப்பு தம்புக்குட்டிமூப்பர் அவர்களின் ஆன்மஇளைப்பாற்றிக்காக இங்கு மாசிமாதம் 24-ந்திகதி சனிக்கிழமை காலை 6-30 மணிக்கு ஓர் துக்கப்பாடற்பூசை நிறைவேறும்.

கட்டளைக்குரு.

---

### கிராமச்சங்க
## மண்டபத் திறப்புவிழா
### நெடுந்தீவு

"சுதந்திர இலங்கையில் நீங்களே உங்களைநடத்திக்கொள்ள வேண்டும். நானே உங்கள்ஊழியன். அரசாங்கம் உங்கள்கையில் இன்று இருக்கின்றது. கிராமச்சங்க தலைவருடனும், சங்கத்துடனும் நீங்கள் ஒத்துழைத்தால் யாவும் திறம்பட்நடக்கும். தற்போது தலதாபன மந்திரியாராயிருக்கும் திரு. S.W.R.D. பண்டாரநாயகா அவர்கள் தலதாபனங்கள்மட்டில் மிக்க கரிசனையும், உதவிசெய்வதற்கு அதி ஆவலுமுள்ளவர்" என்று வடபகுதித் தலதாபன அதிபர் திரு. D. இராசேந்திரா அவர்கள் நெடுந்தீவுக் கிராமச்சங்க மண்டபத்தைத் திறந்துவைத்தபோது கூறினின்ருர்.

நெடுந்தீவுக் கிராமச்சங்க தலைவர் V. S. ஜேம்ஸ்அவர்கள் வடபகுதித் தலதாபனஅதிபரைக் கிராமச்சங்க மண்டபவாசலில் மாலையிட்டு வரவேற்றதும் மண்டபத்தைத் திறந்துவைக்கும்படி மக்கள்பேரால் கேட்டுக்கொண்டார். மக்களின்கரகோஷத்திடையே அதிபர் மண்டபத்தைத் திறந்துவைத்தார்.

"பலஆண்டுகளாக வேண்டப்பட்ட இம்மண்டபத்துக்குச் சென்றஆண்டின்இறுதியில் அத்திவாரக்கல் நாட்டிய வடபகுதித் தலதாபன அதிபர் திரு. D. இராசேந்திரா அவர்களே இன்று மண்டபத்தையும் திறந்துவைத்தார். அன்றியும் இது நம்நாட்டிற்கு ஓர் நல்லஅறிகுறியும், தலதாபன பகுதியாரால் இங்குஇன்னும் நடைபெறவேண்டிய பல திருத்தங்களுக்கு ஓர் வழியுமாகும். பெருந்தரைப் பாகத்திலிருந்து ஆழ்ந்த சமுத்திரத்தால் பிரிக்கப்பட்டும், ஓர்வகையில் தன்னந்தனியே கைவிடப்பட்டும்இருக்கும் இத்தீவைத் தரிசிக்கவரும் அரசாங்க அலுவலாளர்கள் தன்னிஷ்டமாக ஓடிஆடித்திரியும் காட்டுக்குதிரைகளைப் பார்க்கவராத கஷ்டப்படும் மக்களின் நிலையைஉணர்ந்து ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று கிராமச்சங்கதலைவர் திரு. V. S. ஜேம்ஸ் அவர்களால் மண்டபத்தில்நடைபெற்ற பகிரங்கவரவேற்புரையின்போது கூறப்பட்டது.

28-1-51 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் வடபகுதித் தலதாபனத்தலைவரும், மற்றும் பிரமுகர்கள் பலரும் 'லிங்ஸ்' என்ற மோட்டர் படகின்மூலம் நெடுந்தீவு மாவிலித்துறைமுகம் வந்திறங்கினர். கிராமமக்களும், அங்கத்தினர்களும், பல உத்தியோகஸ்தர்களும்நின்று அவர்களைவரவேற்றனர். கிராமச்சங்க உபதலைவர் திரு. S. பசுபதிப்பிள்ளை அவர்கள் உதவித்தலதாபனஅதிபரைத் துறைமுகத்தில்வைத்து மாலைசூட்டிவரவேற்றதும் குதிரைபூட்டி அலங்கரிக்கப்பட்டிருந்த வண்டியில் மேளவாத்தியம்முழங்கக் கிராமச்சங்கத்தலைவர்சகிதம் ஒருமைல் தூரமுள்ள கிராமச்சங்கப் புதியகட்டடத்துக்கு ஊர்வலமாகஅழைத்துச்செல்லப்பெற்றனர். 10 மணிக்குத் திறப்புவிழா ஆரம்பமாயிற்று. மணடபத்தின் உள்ளும்புறமும் மக்கள் குழுமியிருந்தனர்.

திரு. A. கந்தையாஆசிரியர், வடபகுதிக் கிராமச்சங்கங்களின் மகாநாட்டுக் காரியதரிசியும், அல்லைப்பிட்டி - மண்டைதீவுக் கிராமச்சங்கத்தலைவருமாகிய திரு. K. கயிலாயபிள்ளை, திரு. V. J. சின்னையாஆசிரியர், நெடுந்தீவு அரசினர்பாடசாலைத் தலைமைஆசிரியர் திரு. C. V. E. நவரட்ணசிங்கம், ஆசிரியர் S. சின்னப்புநாயகம் ஆகியோரும் திறப்புவிழாசம்பந்தமாகவும், சனசமூகநிலையங்கள் சார்பாகவும் உபந்நியாசங்கள்செய்தனர். கிராமச்சங்க தலைவரால் நன்றிகூறப்பட்டதும் புகைப்படம்எடுக்கப்பட்டுத் திறப்புவிழா இனிது முடிபெய்தியது.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LIST OF RELIGIOUS & CATECHETICAL BOOKS IN TAMIL

| | | |
|---|---|---|
| Sinna Kurippidam | Small Catechism ... | 15 |
| Peria Kurippidam | Big Catechism (in Press) ... | |
| Meivivaha Kurippidam | Sacrament of Marriage ... | 25 |
| Ooruthipusuthal Kurippidam | Sacrament of Confirmation ... | 05 |
| Gnana Upathesa Padathiddam | Syllabus of Catechism ... | 90 |
| Pirasitha Arathanayin Satharana Sebangal | Ordinary of the Sacraments ... | 2-00 |
| Thivia Poosain Satharana Sebangal | Ordinary of the Mass ... | 50 |
| Modsha Pathai | Path to Heaven (in Press) | |
| Sebachendu | Bouquet of Prayers ... | 75 |
| Ira Arathanai | Night Adoration ... | 15 |
| Nithia Arathanai | Perpetual Adoration ... | 20 |
| Poosai Uthavuvore Kaithunai | Altar Boys Manual ... | 40 |
| Thivia Poosain Peril Thianangal | Meditation on Holy Mass ... | 1-00 |
| Viacula Prasangam (Pasam) | Sermons on the Passion of O. L. ... | 1-50 |
| Suvisesha Viruthurai | Commentary on the Gospel ... | 5-00 |
| Suvisesha Viruthurai (Pasamudan) | do (with Pasam) ... | 6-50 |
| Keerthanaimalai | Sacred Hymns & Latin Chants (in Press) | |
| Navathina Utchavam | Novena to Infant Jesus ... | 75 |
| Satpirasatha Anpan | Lover of the Eucharist ... | 30 |
| Tharuma Appam | St. Antony's Bread ... | 1-00 |
| Thevamathavin Vanakkamatham | Month of May ... | 85 |
| Mariain Masillatha Iruthaya Poksham | Treasury of Im. Heart of Mary ... | 1-50 |
| Marutha Madhu Yathirai Kaithunai | The Madhu Manual (in Press) | |
| Pathima Mathavum Sebamalaiyum | Fatima and the Rosary ... | 25 |
| Avarkal Moonru Siruvargal (Fatima) | There were Three Little Children ... | 2-50 |
| Maha Manamthirumputha Iyaka Prasangangal | Sermons on Mary's Mission | 1-00 |
| Gnanavodukka Prasangam | Instructions & Sermons (in Press) | |
| Thivia Poosain Mahathuvam | Holy Mass Explained ... | 2-50 |
| Christunatharudaya Pothanaikal | Christ and His Teachings ... | 1-50 |
| Andavar Sarithiram (Part I) | Life of Our Lord (Part I) | 90 |
| Andavar Sarithiram (Part II) | Life of Our Lord (Part II) | 90 |
| Christunatharin Sarithira Arachchi | Life of Christ Critically Examined | 70 |
| Pakthi Sabaigal | Pious Associations | 20 |
| Athuma Tharisanam | Mirror of the Soul | 20 |
| Sathia Vetha Tharppanam | Catholic Doctrine (Part I) ... | 2-50 |
| Mannar Vetha Sachchigal | Martyrs of Mannar ... | 1-00 |
| Helenavin Seevia Sarithiram | Story of St. Helena | 35 |
| Louis Marie Seevia Sarithiram | Life of St. Louis Marie De Montfort | 40 |
| Nanae Kuttavali | (Novel) ... | 1-00 |
| Thavamalai | (Novel) ... | 35 |
| Thangamanie | (Novel) ... | 45 |

**ST. JOSEPH'S CATHOLIC PRESS,**
**JAFFNA.**



## ... பிரச்சினை தீர்ந்தது






லெக்டோஜனை நாம் கண்டுபிடித்ததுமுதல் உணவூட்டுவது இனிமேலும் ஓர்பிரச்சினை அல்ல. குழந்தை அதை நேசிக்கிறது. அத்துணை இலகுவாக அது சீரணமாகிறது.... அத்துடன் நல்ல போஷணையும் அளிக்கிறது. இப்போது... குழந்தை எப்போதும் திருப்தியாயிருக்கிறது. லெக்டோஜனை நாம் கண்டுபிடித்தது முதல் நமது குழந்தையைப் போஷிக்க எதையும் சிந்திக்கப்படாது. ஆம், எங்குமுள்ள தாய்மார் எல்லோருமே அப்படியே சொல்லுகிறார்கள். அதனால் பூரண சுகத்தை வேண்டி உங்கள் குழந்தையை லெக்டோஜன் கொண்டு உணவூட்டுங்கள்.

# லெக்டோஜன்

உலகத்திலுள்ள குழந்தைகளின் உணவு.



## மாதோட்டத் தபால்

(நாட்டுத்தூதன்)

ஐயா! காலமழை பொய்த்தமையாலே மாதோட்டத்தை ஒருகொடூர பஞ்சம் வாட்டப்போகின்றதேயென மக்கள் மனங்கலங்கினர். பரிதபித்தனர். சிலர்கண்ணீரும் உகுத்தனர். சிலர் வீட்டிலுள்ள நெல்லையெல்லாம் வாரி வயல்களில் வீசிவிட்டோமேயென மனம்நொந்து வானத்தை ஏறெடுத்தனர். உளஞ்சலித்த சிலஉழவர் வாடிக்கருகிய நெற்பயிரை மாடுகள்மேய விட்டுவிட்டனர். இவைகளைக்காணச் சகியாதவன் போல் சென்றமாசநடுக்கூற்றில் கார்மேகம் கருணைமழை பெய்தது. பிறவிடங்களிற்பொழிந்த பெருமழையால் கட்டுக்கரைத்தடாகம் சலமட்டத்திலேற்றமடைந்தது. இதனால் மக்கள் அகமும் முகமும் மலர்ந்தனர். இனிஒருவாறு வேளாண்மை விளைந்துவிடுமென்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது. அரசினராலே அளிக்கப்பட்டுவரும் கஷ்ட நிவாரணவேலைகளும் ஏழைகளைக் கைதூக்கிவருகின்றன.

இதுவா மதுநீக்கம்—இதுவிஷயமாகச் சங்கங்களாலும், தனிப்பட்டவர்களாலும் இங்கேசமீபத்தில் பரபரப்பானமுயற்சிகள் நடைபெற்றுவந்தன. இவற்றுள் போலிமதுவிலக்குப் பொம்மைகளின் கூச்சல்களும் நிறைந்திருந்தன. சமுதாயங்களிடையே குட்டிச்சங்கங்களின் குஸ்திவிளையாட்டுகளும் குமுறிஎழுந்தன. சில முன்னேற்ற சங்கங்கள் நேர்மையான வழியினின்றும்விலகித்தறுகுறும்பான முறையிலும் நடந்துகொண்டன. இவ்விதசெயல்களினாலே பூரணமதுநீக்கம் தடைபட்டது வருந்தத்தக்கதொன்று. ஒருசற்கருமம் சித்திபெற வேண்டுமாயின், இன்சொல்லும், நல்லபோதனையும், பாரபட்சமின்மையும் அவசியம்வேண்டும். தனித்துத்தானே வெட்டிவிழுத்துவேனென்னும் கர்வமான எண்ணமும், பேச்சும், செயலும் அறவேஒழியவேண்டும். சங்கங்களைக்கண்காணிக்கும் பெரியோர்கள் அவற்றிற்குச் சோடினைச்சிறகுகளைக் கட்டிப் பறக்கவிட்டுக் கண்களை இறுக மூடிக்கொண்டார்கள். இதன் விளைவாகத் தலைமன்னார்மன்னார் முதலாம் நம்பர், உயிலங்குளக் கள்ளுத்தவறணைகளும், மன்னார் சாராயத்தவறணையும் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இவ்வாறாயின் எவ்வாறு பூரணமதுநீக்கம் நாட்டில்உண்டாகும்? இதனால்மக்களுக்கு மேலும்பணச்செலவும், சுகக்குறைவுமே அல்லாது மதுவிலக்கும் இல்லை, மக்களுக்குச் சுபீட்சமும் இல்லை.

ஒருகுறை நீங்கியது—மன்னார் மாதோட்டப்பகுதிகளிலே மாணவர்களும், ஆசிரியரும், பெற்றாரும் வருடஆரம்பத்திலே படிக்கும்புத்தகங்களைப் பெறுவதில் பெரிதும் கஷ்டப்பட்டு வந்தார்கள். பிறஇடங்களுக்கு எழுதியே வெகுசிரமப்பட்டுக் காலந்தாழ்த்தியே தேவையான புத்தகங்களைப் பெற்றுவந்தார்கள். இது பாடசாலை ஆரம்பத்திலே முறையாகக் கல்வி பயிற்ற ஆசிரியருக்குத் தொல்லையைக் கொடுத்துவந்தது. தற்போது மன்னார் அர்ச். செபஸ்தியார்வீதியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் "ஆஞ்சலா" புத்தகசாலை அக்குறையை நீக்கியிருக்கிறது.

வெங்காயக்கூடை — வெங்காயக் கூடைகளாலே நமது அரசினருக்கு ஒருதொகைப்பணம் பிறநாட்டுக்கு வருடந்தோறும் செல்வதாகச் சொல்லப்படுகிறது. இதனைத்தடைசெய்யும் பொருட்டு இங்குள்ள மாதர் முன்னேற்றசங்கங்கள்முன்வந்து பலபெண்மணிகளை இத்தொழிலில்பயிற்றுவித்து அவர்கள்மூலம் பாடசாலைகளிலும், கிராமக்குடிசைகளிலும் அதனைமிகுந்த சிரத்தையுடன் பழக்கிவருவது பாராட்டற்பாலதே.

தெலிபோன் இணைப்புவசதி— இங்குகாலந்தோறும் தபால், தெலிபோன்வசதிகள் தீவிரவிருத்தியடைந்து மக்களுக்குப் போதியசௌகரியங்களை உண்டுபண்ணிவருகின்றன. சென்ற 18-ந்திகதி திருக்கேதீஸ்வரத்திலும், பாப்பாமோட்டையிலும் புதிதாகத் தெலிபோன் இணைப்புவசதிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இதில் கரிசனைகொண்டு உழைத்துவருகிறவர் நமதுபிரதிநிதியும், தந்தி-தபால் மந்திரியாருமான திரு. சிற்றம்பலம் அவர்களேயென்க.—சுபம்!

## திரு. ஜே. என். தம்புக்குட்டி அவர்களின் தேகவியோகம்

வயாவிளான் கிழக்குவாசரும், மலாயாவைச்சேர்ந்த கோலலிப்பீஸ் என்னுமிடத்தில் பலவருடங்களாகச் சேர்வேயராகவும், பின் ருவ்ஸ்மனாகவும் உத்தியோகம்வகித்துத் தமது உடன் உத்தியோகஸ்தர், சிநேகிதர்பலராலும் நன்கு மதிக்கப்பெற்றிருந்தவரும், நேர்மை, தயாளம், பொறுமை, பயபத்தியாதியாம் குணலட்சணங்கள் அமையப்பெற்றவருமாகிய திரு. தம்புக்குட்டி அவர்கள் சில தினங்களாக நோய்வாய்ப்பட்டிருந்து, அந்திய தேவதிரவியானுமானங்கள்பெற்றுச் சென்ற 25-ந்திகதி வியாழக்கிழமைஇரவு தமது 74-ம் வயசிலே தமது ஆன்மாவைப் படைத்தோன் கரத்திலொப்படைத்தனர். இவருக்கு மேரி தங்காசமெனும் ஒருபுத்திரிஉண்டு. சிலோன் தியேற்றேர்சில் உத்தியோகமாயிருக்கும்திரு. ஜே. என். சிங்காயர் இவரது புத்திரராவர். பிரபலவைத்தியர் திரு. எஸ். சமத்தர்அவர்களும், மயிலிட்டிக் கட்டளைக்குரவர் வண. என். பெனடிக்ற் சுவாமியவர்களும் இவரின் நெருங்கிய சுற்றத்தவராவர். இவர் தமது இனசனருக்கும், அயலாருக்கும் ஓர் உபகாரியாயிருந்து அவர்களெல்லாராலும் நன்குமதிக்கப்பட்டுவந்தார். இவரின் பிரேதமானது அழகிய முதிரைப் பேழையில்வைத்து மறுநாள் சாயந்தரம் வண. என். பெனடிக்ற் சுவாமியாரும், கட்டளைக்குரவர் வண. லெக்குத்தர்சுவாமியாரும் துக்கசங்கீதம் பாடிச்செல்ல, இனசனர், ஊரவர் அனுதாபத்துடன்பின்செல்ல, அர்ச். அமலோற்பவநாயகி ஆலயங்கொண்டு சென்று அந்திம திருச்சடங்குகள் நிறைவேறியபின் சேமக்காலையில் கடைசிஆசீர்வாதத்துடன் பூமதானஞ் செய்யப்படலாயிற்று. இவரைஇழந்து பிரலாபிக்கும் மனைவி, புத்திரி, புத்திரன், மருமகள், இனசனரோடு நானும் அனுதாபப்படுகின்றேன்.

**R. I. P.** — நிருபர்

## துன்பத்தில் இன்பம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாநஷ்டமும் நேரிட்டனவென்று விசுவாசித்து அவருடைய திருச்சித்தத்துக்கு முழுதும் பணிந்துகொண்டார். விசுவாசிகளும் தங்களுக்கு நேரிடும் சேதபாதம், துன்பதுயரங்களில் நடந்துகொள்ளவேண்டியமுறை இதுவே.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தினாலும், பரிசுத்த பொம்பேமாதா, வியாகுல-சந்தோஷங்களை அனுபவித்தமகிமை நிறைந்த அர்ச். சூசையப்பர், கோடியற்புதரான அர்ச். அந்தோனியார் இவர்களின் வேண்டுதலினாலும் எனது பிள்ளைகள் இருவரும் பரீட்சையில் சித்தியடைந்தார்கள். மேற்படி அர்ச்சியசிஷ்டர்களின் நாமங்கள் எங்கும் என்றும் புகழப்படக்கடவனவாக. நேர்த்திப்படி இதைப்பிரசுரம் செய்கிறேன்.

சூராவத்தை யோ. கி.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, 8 February 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org